# வேத பாரதி செய்திகள்

VEDABHARATHI SEITHIGAL

Tamil Monthly
தமிழ் மாத இதழ்

| மலர்:4 | இதழ்:8 | மே :2020 | ரூ.10/– | வருட சந்தா:ரூ.100/– |
|---|---|---|---|---|
| Volume:4 | Issue:8 | May : 2020 | Rs.10/- | Annual Subs: Rs.100/- |







## ஸ்ரீ மஹா மேரு மண்டலி

81/1, மன்னப்பன் தெரு, கோட்டூர், சென்னை – 600 085. தொலைபேசி : 044 – 2447 4744

### ஸ்ரீஸ்ரீஸ்ரீ மதுராம்பிகாநந்த ப்ர்ம்மேந்திர ஸரஸ்வதி அவதூத ஸ்வாமிகள் அருளாணைப்படி

2020 மார்ச் மாதம் முதல் தொடர்ந்து அவரவர் இல்லங்களில் ஸ்ரீ லலிதா ஸகஸ்ர நாம பாராயணம், ஸ்ரீசக்ரத்திற்கு குங்கும அர்ச்சனை, அம்பாளுக்கு உபசார பூஜைகள் செய்து கொண்டு உள்ளார்கள்.

மேலும் 2020 மே மாதம் முடிய தொடர்ந்து ஸ்ரீ அம்பாளுக்கு உபசார பூஜைகள், ஸ்ரீசக்ரத்திற்கு குங்கும அர்ச்சனை செய்து கோவிட் 19 தொற்று நோயை வென்று ஆரோக்கியமாக வாழ கேட்டுக் கொள்கிறோம்.

**ஸ்ரீ சுப்ரமணியம்**
செயலாளர் – 9444075811
ஸ்ரீ மஹா மேரு மண்டலி

# வேதபாரதி
## செய்திகள்



**காயத்ரீ தேவி**

**வியனுலகனைத்தையும் அமுதென நுகரும்**
**வேத வாழ்வினைக் கைப்பிடித்தோம்.** மஹாகவி பாரதி

# அறிவோம் வேதம்

இந்தப் பகுதியில் ஒவ்வொரு மாதமும் ஒரு வேதமந்திரமும் அதற்குண்டான பொருளும் வழங்கப்படும்.

**வேதமந்திரம் - 8**

**ஓம் பூ1ர்ணமத3:பூ1ர்ணமித3ம் பூ1ர்ணாத்1பூ1ர்ணமுத3ச்யதே1**
**பூ1ர்ணஸ்ய பூ1ர்ணமாதா3ய**
**பூ1ர்ணமேவாவசிஷ்யதே1|| ஓம் சாந்தி:சாந்தி:சாந்தி**

**- ப்3ருஹதா3ரண்யக1உப1நிஷத3ம்**

*பொருள்:*

*ஓம் முழுமையது:முழுமையிது:முழுமையான*
*முழுமையில் இருந்து அந்த முழுமை தோன்றும்:*
*முழுமையில் இருந்து அந்த முழுமை தன்னை*
*முழுமையாய் எடுத்த பின்னும் முழுமை மிஞ்சும்*

*ஓம் சாந்தி:சாந்தி:சாந்தி:*

# வேதபாரதி செய்திகள்

**(ஆன்மீக மாத இதழ்)**

மலர்: 4 இதழ்: 8

அச்சிட்டு வெளியிடுபவர்
பதிப்பாளர், ஆசிரியர்
**ஆர்.வெங்கட்ராமன்**
27, F1 அன்னை இந்திரா நகர்,
வேளச்சேரி, சென்னை - 600 042.
செல்: 94434 95950

அச்சகம்
**சபாநாயகம் பிரிண்டர்ஸ்**
39, மில்லர்ஸ் சாலை, கீழ்ப்பாக்கம்,
சென்னை - 600 010.

**சந்தா விவரம்**

| | |
|---|---|
| வருட சந்தா | ரூ.100 |
| ஆயுள் சந்தா | ரூ.1500 |

சந்தா அனுப்புகிறவர்கள் **Vedabharathi** என்ற பெயருக்கு காசோலையை மேற்கண்ட அலுவலக முகவரிக்கு அனுப்பவும். சந்தா புதுப்பிப்பவர்கள் தங்களுடைய சந்தா எண்ணைத் தவறாமல் குறிப்பிடவும்.

வங்கி மூலம் புத்தக சந்தா
நன்கொடை வழங்கிட

**VEDABHARATHI**
**City Union Bank,**
**Velachery Branch**
**A/c No. 510909010005286**
**IFSC : CIUB 0000262**

**REGD No : TN/CC(S) / DN / 571 / 18-20**
**RNI No : 1282188**
**Title Code : TNTAM/2016/73726**
**R.Dic.No.1845/2015**

**VEDABHARATHI SEITHIGAL**
**(Tamil Monthly Magazine)**
**Published on : 1-7th (1st Week) Every Month**
**TN/PM G (CCR) / WPP 605/19-20 /**
**Valid from 28.02.2019 to 31.12.2020**


# புத்தகத்தின் உள்ளே


| | |
|---|---|
| அட்டைப்பட விளக்கம் | 5 |
| வைகாசி மாத விசேஷங்கள் | 6 |
| சுபாஷிதம் | 7 |
| நாம ஸங்கீர்த்தனம் | 8 |
| தர்மத்தின் குரல் | 11 |
| ஸ்ரீமத் பகவத்கீதை | 12 |
| தனிமை+முதுமை+கொரோனா ஊரடங்கு ரெட்டை தண்டனை | 14 |
| சிருங்கேரி மஹா சுவாமிகள் | 19 |
| ஸ்ரீ மஹா பெரியவாளின் வாக்கு | 25 |
| பெற்றோர்களே கவணியுங்கள் | 27 |
| கோவிட்-19 வெல்வோம் | 30 |
| கைகொடுத்த வேதபாரதி | 32 |
| ஏப்ரலில் புதுவை வேதபாரதி | 35 |
| வெட்டி ஒட்டும் தலைமுறை | 39 |
| தர்மம் வேளச்சேரி வேதபாரதி | 41 |



புத்தக வடிவமைப்பு :

**ரெம்ஸ் பிரிண்டீஸ்**
நெ.17, பாரதி தெரு, இந்திரா நகர்,
காமராஜபுரம், வேளச்சேரி,செ-42.
போன்: 8939000064

நிர்வாக முகவரி:
எண்.31, சேஷாத்திரிபுரம்
1வது மெயின் ரோடு, பேபி நகர்,
வேளச்சேரி, சென்னை - 600 042.

**Ph : 94434 95950**

**Email:vedabharathichennai@gmail.com**
**Website: www.vedabharathi.org**

# அட்டைப்பட விளக்கம்

## ஸ்ரீ நரஸிம்ம ஜெயந்தி

ஸ்ரீமத் பாகவதத்தில் உள்ள ஏழாவது ஸ்கந்தத்தில் உள்ள ப்ரஹ்லாத சரித்திரம் மிகவும் விசேஷமானது. ஸ்ரீ மஹா விஷ்ணு பகவானின் பல்வேறு அவதாரங்களில் மிகவும் விசேஷமானது நரஸிம்ஹ அவதாரம். வைசாக சுக்லபட்ச சதுர்தசி ஸ்வாதி நட்சத்திரத்தில் மஹா பிரதோஷ வேளையில் கழுத்துக்கு மேல் ஸிம்ஹ வடிவமாகவும் கழுத்துக்கு கீழ் மனித வடிவமாகவும் ஸ்ரீ மஹாவிஷ்ணு ஸ்ரீ நரஸிம்ம மூர்த்தியாக அவதாரம் செய்தார். இவ்வுலகத்திற்கு ஸ்ரீ நாராயண மந்த்ர மஹிமை சொல்வதற்காகவும் நாம் மேன்மை அடையவும் நரசிம்ம அவதாரம் மனித குலத்திற்கு கிடைத்துள்ளது.

மற்ற மதங்களுக்கும் நம் ஸனாதன தர்மத்திற்கும் பெரிய வித்யாசம் என்னவெனில் மற்ற மதங்களில் இறைவன் இருக்கிறான். அவனைத் தொழவேண்டும் இறைவன் எங்கோ உள்ளான் என்பது நம்பிக்கை. ஆனால் நம் ஸனாதன தர்மத்தின் அடிப்படையே இறைவன் எங்கும் இருக்கிறான். இறைவன் இல்லாத இடமோ, பொருளோ இல்லை. புனிதம் என்று கருதக்கூடிய இடம் மட்டும் இல்லாமல் புனிதமாக கருதாத வஸ்துக்களிலும் இறைவன் உள்ளான். இதுதான் ஸனாதன தர்மத்தின் மேன்மை. இக்கருத்தை வலியுறுத்தவே நம் இறைவன் தூணிலும் இருப்பான், துரும்பிலும் இருப்பான் என்று ஸ்ரீ நரசிம்ம அவதாரம் நமக்கு கூறுகிறது. உலகத்தின் ஹ்ருதய ஸ்தானமாக பாரதம் உள்ளது. உலகத்திற்கு உண்மையான ஆன்மீக வழிகாட்டல் பாரதத்தினால் மட்டுமே வழங்க முடியும். நம் ஸனாதன தர்மத்தை தனி ஒரு குருமார் தோற்றுவிக்கவில்லை. இதன் தாத்பர்யம் பல ஆயிரம் ஆண்டுகளாக நமக்கு நம் இறைவன் பற்றிய தெளிவும், வழிகாட்டுதல்களும் நம் வாழ்வியலை புரிய வைத்துள்ளது. ஸனாதன தர்மத்தின் அடிப்படை கொள்கையான எங்கும் இறைவன் உள்ளான் என்ற பேருன்மையை ஸ்ரீ ப்ருகலாத சரித்திரமும், ஸ்ரீ நரசிம்ம அவதாரமும் நமக்கு வழி காட்டுகிறது. ஸ்ரீ நரசிம்ம ஸ்வாமியை வணங்கி பேரருள் பெறுவோம். **ஸ்ரீ நரசிம்ம ஜெயந்தி நாள் 5.05.2020**

ஆசிரியர்.

# வைகாசி மாத விசேஷங்கள்
## (மே 15.05.2020 முதல் ஜுன் 14.06.2020 வரை)

| | | | |
|---|---|---|---|
| *14.05.2020* | வை *1* | வியாழன் | விஷ்ணுபதி புண்யகாலம் |
| *18.05.2020* | வை *5* | திங்கள் | ஏகாதசி |
| *22.05.2020* | வை *9* | வெள்ளி | அமாவாசை |
| *23.05.2020* | வை *10* | சனி | புன்னாக கௌரி விரதம் |
| *25.05.2020* | வை *12* | திங்கள் | ஸ்ரீமத் ராமானுஜர் திருநட்சத்ரம் |
| *28.05.2020* | வை *15* | வியாழன் | சஷ்டி |
| *02.06.2020* | வை *20* | செவ்வாய் | ஏகாதசி |
| *04.06.2020* | வை *22* | வியாழன் | வைகாசி விசாகம் |
| *05.06.2020* | வை *23* | வெள்ளி | பௌர்ணமி, அனுஷம்,<br>ஸ்ரீ மஹா பெரியவா ஜெயந்தி |
| *07.06.2020* | வை *25* | ஞாயிறு | திருஞானசம்பந்தர் ஜெயந்தி |
| *11.06.2020* | வை *29* | வியாழன் | சஷ்டி |

## அமாவாஸை ஸங்கல்பம்
(வாசகர்களின் வேண்டுகோளுக்கு இணங்க)

*நாள் : 22.05.2020, வெள்ளிக்கிழமை - அமாவாஸை - சார்வரி நாம ஸம்வத்ஸரே உத்தராயணே வஸந்தருதௌ ரிஷப மாஸே க்ருஷ்ணபக்ஷே சுக்ர வாஸர யுக்தாயாம் க்ருத்திகா நட்சத்திர யுக்தாயாம் அமாவாஸ்யாம் அதிகண்டயோக சதுஷ்பாத் / நாகவ கரண ஏவங்குண விசேஷன விஸிஷ்டாயாம் அமாவாஸ்யாம் புண்யதிதௌ அமாவாஸ்ய புண்யகாலே தர்ஸ ஸ்ரார்த்தம் ஹிரண்ய ரூபேண அத்ய கரிஷ்யே ததங்கம் தில தர்ப்பணம் கரிஷ்யே.*

Owned, Published and Printed by **R. VENKATARAMAN,** Printed at **SABANAYAGAM PRINTERS,** 39, Millers Road, Kilpauk, Chennai - 600 010 and Published at 27, F1, Annai Indira Nagar, Velachery, Chennai - 42.
Editor : **R. VENKATARAMAN, 9443495950**

# சுபாஷிதம் - 18

**“சுபாஷிதம்”** *என்பது சொல்வதற்கு இனிமையான ஸ்லோகங்கள். இத்தகைய ஸ்லோகங்களின் பொருள் எவரையும் கவரும். சிறு குழந்தைகளுக்கு இத்தகைய நல்லுரைகளை கற்றுத்தருவதால் எதிர்காலத்தில் அந்த மாணவனின் மனவளம் செம்மையாக அமைவதோடு அவன் பலருக்கு வழிகாட்டியாக எடுத்துக்காட்டாக விளங்குவான்.*

**அரௌ அபி உசிதம் கார்யமாதித்யம் க்ருஹமாகதே**
**சேத்து: பார்ச்வகதாம் சாயாம் ந உபஸம்ஹரதே த்ருமே:**

*இல்லம் தேடி வந்தவன் எதிரியானாலும் விருந்தினனாய் மதிக்கப்பட வேண்டும். தன்னை வெட்ட வருபவனுக்கும் மரம் நிழலை விலக்கிக் கொள்வதில்லை.*

**கிம் அபி அஸ்தி ஸ்வபாவேன ஸுந்தரம் வா அபி அஸுந்தரம்**
**யத் ஏவ ரோசதே யஸ்மை பவேத் தத் தஸ்ய ஸுந்தரம்**

*இயல்பிலேயே அழகானதோ அழகற்றதோ இவ்வுலகில் எதுவுமில்லை. எந்த ஒரு பொருளும் அது விரும்பப் படுகையில் அழகானதாகி விடுகிறது.*

**ம்ருகமீனசஜ்ஜனானாம் த்ருணஜலஸந் தோஷவிஹிதவ்ருத்தீனாம்**
**லுப்தகதீவரபிஷுனா:நிஷ்காரணம் ஏவ வைரிணோ ஜகதி**

*மான்கள் புற்களாலும், மீன்கள் நீராலும், சான்றோர் நிறைவுற்ற மனதாலும் எளிமையாய்ப் பிறரைத் துன்புறுத்தாது வாழ்ந்தாலும், காரணம் ஏதுமின்றி அவர்களுக்கும் எதிரிகள் முளைக்கிறார்கள்.*

*தொகுப்பு :* **பரிதி**

*இந்தப் பகுதி தொடர்ந்து வெளிவர*
*நிதிஉதவி செய்து வருபவர்*
**ப்ரம்மஸ்ரீ முனீஸ்வர சாஸ்திரிகள்,** *வேளச்சேரி*

# நாம ஸங்கீர்த்தனம்

சென்றமாத தொடர்ச்சி....

**ஸ்ரீ ஸ்ரீதர வேங்கடேச ஐயாவாள் :**

ஸ்ரீமடத்தின் 59வது பீடாதிபதியாக விளங்கிய போதேந்திர ஸ்வாமிகள் கோவிந்தபுரத்தில் தங்கி இருந்த சமயத்தில் திருவிசநல்லூர் எனும் கிராமத்தில் இருந்த ஸ்ரீதர வெங்கடேச ஐயாவாள் அவர்களுடன் சேர்ந்து நாம ப்ரச்சாரத்தில் ஈடுபட்டு வந்தார் என்பதால் இவர்கள் இருவரும் சமகாலத்தில் வசித்து வந்தனர் என்பது தெரிகிறது.

மைசூர் ஸமஸ்தானத்தின் ஆஸ்தான வித்வானாக இருந்த லங்கார்யர் என்பவரின் ஏகபுத்ரனாக அவதரித்தார். சிவநாம ஜபத்திலேயே ஸதாகாலமும் கழிப்பவராக இருந்து வந்தார். தந்தை மறைவிற்கு பிறகு ராஜமரியாதைகளை மறுத்து மனைவி, தாய் ஆகியோருடன் தேசாந்திரமாக திருச்சிராபள்ளி வந்து சேர்ந்தார். பக்தி மார்க்கத்தை மக்களுக்கு உபதேசம் செய்து வந்தார். அந்த பகுதியில் அரசனாக இருந்தவரிடம் ஐயாவாள் சைவப்ரச்சாரம் செய்கிறார் என்று சிலர் சொன்னதில், அவர் இவரை சோதிக்க மாத்ருபூதேஸ்வரரை கிருஷ்ணனாக அலங்கரித்து ஊர்வலமாக அழைத்துவர, உடனடியாக பல ஸ்தோத்திரங்களை செய்தார். பிரபலமடைந்ததால் தனிமையை விரும்பி ஒருநாளிரவு திருச்சியை விட்டு கிளம்பி தஞ்சை, கும்பகோணம் வழியாக திருவிசநல்லூர் வந்து வசிக்கலானார்.

தினமும் இரவு அர்த்த ஜாம பூஜையில் கலந்து கொள்ள காவிரியை கடந்து திருவிடைமருதூர் சென்று வருவார். ஒரு நாள் பலத்த மழையால் போக முடியாமல் நிற்க, கோயில் அர்ச்சகர் வடிவில் வந்து இறைவனே விபூதி ப்ரஸாதம் கொடுத்தார். மேலும் ஒரு சமயம் அவர் வீட்டில் ஸ்ராத்தம் செய்ய வேண்டி காவிரி ஸ்நானத்திற்கு போய், அங்கு பார்த்த ஒரு கீழ்ஜாதி மனிதனுக்கு பசி போக்க வீட்டிற்கு அழைத்து வந்து அன்னமிட்டார். அது தெரிந்து ஊர் மக்கள் அவர் செய்த அபராதத்திற்கு கங்கையில் ஸ்நானம் செய்ய வேண்டும் என்று கூறிவிட்டனர். அவர் வீட்டு கிணற்றில் கங்காஷ்டகம் சொல்லி கங்கையை வரவழைத்து நிறைவேற்றினார். திருவிசநல்லூரில் அவருடைய இல்லத்தில்

*கார்த்திகை மாத அமாவாசையின் போது இந்த நிகழ்ச்சி விரிவாக கொண்டாடபடுகிறது.*

*போதேந்திர ஸ்வாமிகளுடன் பல கிராமங்களுக்கு சென்று சிவநாம சித்தாந்தத்தை ப்ரவசனம் செய்து வந்தார். இவர் தன்னுடைய இறுதிகட்டத்தில் திருவிடை மருதூர் மஹாலிங்க ஸ்வாமியுடன் ஐக்கியமாகிவிட்டதாக வரலாறு கூறுகிறது.*

**மருதாநல்லூர் ஸத்குரு ஸ்வாமிகள் :**

*ஜகத்குரு பகவந்நாம போதேந்த்ர ஸ்வாமிகளும் ஸ்ரீதர வெங்கடேச ஐயாவாளும் அந்தர்த்யானமான பிறகு சுமார் 100 வருடங்கள் கழித்து திருவிசநல்லூரில் வேங்கட சுப்ரமண்ய ஐயர் தம்பதிக்கு மகனாக ஸ்த்குரு ஸ்வாமிகள் அவதரித்தார். குழந்தை மூன்று வயது வரை யாருடனும் பேசாமல் ஊமைபோல் இருந்து வந்தார். மணஞ்சேரி கோபால ஸ்வாமிகள் என்பவரிடம் அழைத்து சென்று, அவருடைய உபதேசத்தால் வாய்விட்டு பேசினார். ஏழுவயதில் உபநயனம் செய்வித்து தந்தையே குருவாக கொண்டு வேதமும் சாஸ்த்ர பாடமும் பயிற்றுவித்தனர். ஸ்ரீராமபிரானை முழுதாக தன்னுள் இருத்தி, ராமாயணம் படிக்கும்போதோ, ப்ரவசனம் கேட்கும் போதோ அதனுள் கதாபாத்திரமாகவே ஆகிவிடுவது வழக்கம்.*

*ஸத்குரு ஸ்வாமிகள் பத்னியுடன் அயோத்திக்கு சென்று வசிக்க விரும்பி ஊர்மக்களிடம் விடைபெற்று கிளம்பினார். ஆந்திரதேசத்தில் சஞ்சரிக்கும் போது தாளப்பாக்கம் அண்ணமாசார்யார் கீர்த்தனைகள் வெகுவாக கவர அங்கேயே தங்கி மற்றபாகவதர்கள் உதவியுடன் அநேக பாஷையில் நிறைய கீர்த்தனங்கள் சேகரித்து கொண்டார். ஜய தேவரின் கீதகோவிந்தம் அவரது மனதை கொள்ளை கொண்டது ஒரு நாள் ஸ்வப்னத்தில் தக்ஷிணதேசத்திற்கு திரும்பிபோ. உன்னால் ஒரு காரியம் நடைபெறவேண்டும் என்று ஒரு காஷாயதாரி கூறியதையடுத்து திருவிசநல்லூருக்கு திரும்பிவிட்டார். பின்னர் மருதாநல்லூரை தனது வாசஸ்தலமாக கொண்டு வசிக்கலானார்.*

*அவரது கனவில் வந்த கட்டளைபடி காலப் போக்கில் காவிரியில் கலைந்து போய்விட்ட போதேந்திராள் அதிஷ்டானத்தை கண்டு பிடித்து புனருத்தாரணம் செய்வதும்,*

நாமப்ரச்சாரத்தை தொடர்வது நாமஸூத்ரம் கொடுப்பது என்று தீர்மானித்தார். கோவிந்தபுரத்தில் அதிஷ்டானத்தை பற்றிய விபரம் யாருக்கும் தெரியாததால் சுமார் பத்து நாட்கள் தீவிர தேடலில் ஈடுபட்டு வந்தபோது விடியற்காலம் ஓரிடத்தில் "ராம" நாமகர்ஜனம் கேட்டு மூர்ச்சையாகிவிட்டார். பின்னர் தஞ்சையில் ஆண்டு வந்த சிவாஜி வம்சத்தை சேர்ந்த அரசன் உதவியினால் காவிரியை வடக்கே திருப்பி விட்டு பிருந்தாவனம் அமைத்தார்.

பின்னர் பல காலம், பலவிதமான வழிகளில் நிறைய சிஷ்யர்களை உண்டாக்கி நாமகீர்த்தனமே கலியில் எல்லாருக்கும் சுலபமான சாதனமாக்கி தன்னுடைய நாற்பத்தி ஒன்றாவது வயதில் சித்தியடைந்தார்.

நானறிந்த வரையில் சமீபகாலங்களில் நாம சங்கீர்த்தனத்தில் சிறந்து விளங்கியவர்களில் முக்கியமானவர்கள் புதுக்கோட்டை சஞ்ஜீவி பாகவதர், மயிலாடுதுறை கிருஷ்ணமூர்த்தி பாகவதர், ஸ்ரீ வாஞ்சியம் ராமசந்திரபாகவதர் இன்னும் பலர் சமீப காலத்தில் ஞானானந்த ஸ்வாமிகள் சிஷ்யரான ஸ்ரீ ஹரிதாஸ் ஸ்வாமிகள் நாம சங்கீர்த்தனத்திற்கு தனி அங்கீகாரம் பெற்றுதந்து உலகத்தில் உள்ள தமிழர்கள் இடம் தனித்துவம் பெற்று விளங்கினார்.

நிகழ்காலத்தில் நாம சங்கீர்த்தனம் பெரிய அளவில் ப்ரசித்தமாகி உள்ளது. உடையாளூர் டாக்டர்.கல்யாணராமன், திருவிசநல்லூர் ராமகிருஷ்ணன், ஈரோடு ராஜாமணி, கடையநல்லூர் ராஜகோபால், கடையநல்லூர் கணபதி துக்காராம் ஸ்வாமிகள், செங்கோட்டை ஹரி ஹர சுப்ரமணியம், கோவை ஜெயராம பாகவதர் இன்னும் பலர் பிரபலமாக உலகம் முழுவதும் நாம சங்கீர்த்தனத்தை பரப்பி கொண்டு தொண்டு செய்து வருகிறார்கள்.

சுபம்.

**ஸ்ரீ ராமன்,** வேளச்சேரி,

# தர்மத்தின் குரல்

## பூஜ்யஸ்ரீ பரமானந்த பாரதி ஸ்வாமிகள்

*அத்தியாயம் 2 : மறுபிறப்பு*

### 2.15. இன்னும் சில கேள்விகள்: (தொடர்ச்சி)

*16. "வாழ்க்கையில் எது மிகவும் முக்கியமானது, நன்னடத்தையா? இறை நம்பிக்கையா?"*

*ஒருங்கிணைந்த மனிதன் இரண்டையும் உடையவனாயிருப்பான். அத்தகையவனல்லாதவனிடம் இரண்டும் இரா.நன்னடத்தை இல்லாமல் கடவுள் மீது நம்பிக்கையுடைய ஒருவனையும், கடவுள் மீது நம்பிக்கை இல்லாமல் நன்னடத்தை உடைய ஒருவனையும் எடுத்துக் கொண்டால், இருவருள் யார் மிகவும் சரியானவன் என்பதற்கு எளிதாக விடை சொல்ல முடியாது. முதலாமவனைவிட, இரண்டாமவன் தேவலை என்று சாதாரண மனிதர்கள் எண்ணுவார்கள். ஆனால், சாஸ்திரம் வேறு விதமாகச் சொல்லுகிறது. முதலாமவன், இரண்டாமவனை விட நன்று என்கிறது. காரணம் இதுதான். நன்னடத்தை என்பது கட்டிடமானால், கடவுள் நம்பிக்கை அதன் உண்மையான அஸ்திவாரம். அஸ்திவாரம் இல்லாத கட்டிடம் நீண்ட நாட்களுக்கு நிற்காது. ஆனால், அஸ்திவாரம் வலுவானதாக இருந்தால், நல்லதல்லாத கட்டிடத்தை நீக்கிவிட்டு, நல்ல ஒன்றைக் கட்டலாம். கெட்ட நடத்தை என்பது கர்மாவின் விளைவு, அதைக் கட்டுப்படுத்த முடியாது என்பதை நாமறிவோம். அதைச் சரி செய்ய ஒரே வழி, இறைவனின் அருளை வேண்டுவதுதான். எனவே, கடவுள் மீது நம்பிக்கை வைத்துள்ளவன், முன்னேற்றப் பாதையில் செல்கிறான். அது இல்லாதவன் பின்னோக்கிச் செல்கிறான் என்று பகவத் கீதை பகர்கிறது.*

....தொடரும்

ஓம் நமோ பகவதே வாஸுதேவாய,

ஓம் நமோ நாராயணாய.

# ஸ்ரீமத் பகவத்கீதை

டி. சூரியநாராயணன் பகுதி - 13



**கீதையின் த்யான ஸ்லோகங்கள் தொடர்கிறது...**

*2)* **நமோஸ்து தே வ்யாஸ விசாலபுத்தே புல்லாரவிந்தாயத பத்ரநேத்ர!**

**யேன த்வயா பாரததைலபூர்ண: ப்ரஜ்வாலிதோ ஞானமய: ப்ரதீப!!**

**பொருள்:** *விசால புத்தி உடையவரும் நன்கு அலர்ந்த தாமரையிதழ் போன்ற கண்களை உடையவரும் ஆகிய வியாசரே, மஹாபாரதம் என்னும் எண்ணைய் நிறைந்த ஞான தீபத்தை ஏற்றிவைத்த உமக்கு நமஸ்காரம்.*

**விளக்கம்:** *இந்த ஸ்லோகத்தில் கீதையை எழுதிய வியாஸ பகவானின் பெருமைகளை எல்லாம் சொல்லி அவருக்கு நமஸ்காரத்தை தெரிவிக்கப்படுகிறது. குரு இல்லாமல் நமக்கு அறிவு வளராது. குருவருள் நமக்கு மிக அவசியம். அந்த குருவிற்கு நமஸ்காரம் தெரிவிக்கும் விதம் இந்த ஸ்லோகம் அமைந்துள்ளது.*

**3) ப்ர பன்ன பாரிஜாதாய தோத்ர வேத்ரைகபாணயே!**

**ஞானமுத்ராய கிருஷ்ணாய கீதாம்ருததுஹே நம: !!**

**பொருள்:** *சரணடைந்தவர்களுக்குக் கற்ப விருக்ஷம் போன்றவனும், பசுவை ஓட்டுவதற்கு ஒரு கையில் பிரம்பைப் பிடித்திருப்பவனும், கீதை என்னும் அமிர்தத்தைக் கறந்தவனும், சின் முத்திரை தாங்கியிருப்பவனும் ஆகிய ஸ்ரீ கிருஷ்ணனுக்கு நமஸ்காரம்.*

**விளக்கம் :** *இந்த ஸ்லோகம் விலை மதிப்பற்ற ஸ்ரீமத் கீதை*

என்னும் ஸாஸ்திரத்தை கொடுத்த பகவான் ஸ்ரீகிருஷ்ணருக்கு நமஸ்காரத்தை சொல்கிறது. ஸ்ரீபகவான் கையில் உள்ள பிரம்பு நம்முடைய வாழ்க்கைக்கு வழிகாட்டியாகவுள்ளது. அதே சமயம் பகவான் கையால் காண்பிக்கும் ஞான முத்திரை நமக்கு எல்லாம் அருள் புரிவதாக காணப்படுகிறது என்பதையும் இந்த ஸ்லோகம் விளக்குகிறது.

**4) ஸர்வோபநிஷதோ காவோ தோக்தா கோபாலநந்தன:!**
**பார்த்தோ வத்ஸ: ஸுதீர்போக்தா துக்கம் கீதாம்ருதம் மஹத்!!**

**பொருள்:** உபநிஷதங்கள் யாவும் பசுக்கள். ஸ்ரீபகவான் கிருஷ்ணன் பால் கறப்பவன். பார்த்தன் கன்று. அருந்துபவர் பேரறிஞர். கீதை என்னும் அமிர்தம் ஒப்பற்ற பால் ஆகிறது.

**விளக்கம் :** இந்த த்யான ஸ்லோகம் ஸ்ரீமத் பகவத் கீதையினுடைய மஹிமையை விசேஷமாக சொல்லுகிறது. இது உபநிஷதங்கள் எல்லாவற்றையும் பசுக்களாகவும், அம்ருதமான கீதையை பாலாகவும், அந்த பசுக்களை கறப்பவன் ஸ்ரீகிருஷ்ணன் என்றும் மகத்தான தத்துவத்தை விளக்குகிறது. இந்த த்யான ஸ்லோகங்கள் ஆசிரியரின் திறமையைக் காண்பிக்கும் வண்ணம் அமைந்துள்ளது.

த்யான ஸ்லோகம் தொடரும்....

**டி.சூரியநாராயணன்**

வேதபாரதி சார்பில் நவீன தொழில் நுட்ப வசதியுடன் ஏப்ரல் 30, மே மாதம் 1,2,3 ஆகிய நான்கு நாட்களில் காலை மாலை இரு வேளைகளிலும் ஸந்த்யா வந்தன பயிற்சி முகாம் நடத்திட வேதபாரதி குழுவினர்கள் ஏற்பாடு செய்து உள்ளனர். ஏற்கனவே பதிவு செய்து உள்ள உறுப்பினர்களை தொடர்பு கொண்டு மே 1,2,3 நாட்களில் நடைபெற இருந்த ஸந்த்யா வந்தன முகாமிற்கு பதிலாக Online Class சில ஸாகைகளுக்கு மட்டும் நடத்திட ஏற்பாடுகள் செய்து உள்ளனர்.

மேலும் விபரங்களுக்கு

**9994926537 / 9486918715**

# தனிமை + முதுமை + கொரோனா ஊரடங்கு = ரெட்டை தண்டனை

பெங்களூரிலிருந்து ஒரு நண்பர் - வயது எழுபது இருக்கலாம். சிறந்த ஓவியர், அறிவாளி என்ற வரிசையில் வைக்கப்படவேண்டியவர். என் எழுத்துகளின் நேர்மையான விமர்சகர், திடீரென்று ஒருநாள் தொலைபேசியில் அழைத்து 'முதுமை என்பது வரமா? சாபமா? என்று கேள்விகேட்டு, நீ உன் கவிதை அல்லது கட்டுரை பாணியில் பதில் சொல். அவசரமில்லை என்றார். அடுத்தநாள் அவருக்குக் கவிதையும் அல்லாத, கட்டுரையும் அல்லாத சில வரிகளை அனுப்பிவைத்தேன். அந்த வரிகள் வேதபாரதி வாசகர்களுக்கு பிடிக்குமா என்று தெரியவில்லை. ஆனால் அவருக்கு பிடித்துவிட்டது. இதற்கான பதிலை நானே தேட ஆரம்பித்தேன்.

இந்தக் கொரோனா காலத்தில் எனக்குத் தெரிந்த, தனித்து வாழும் சில முதியோர்கள் சிலரை அழைத்து 'எப்படியிருக்கிறீர்கள் என்று நலம் விசாரித்தேன். தெம்பாகத்தான் சூழ்நிலையை சமாளிக்கிறார்கள் என்றாலும் அவர்கள் சொன்ன நடைமுறை பிரச்சினைகள் எனக்கு வேதனையளிக்கவே செய்தது. அதைவிட அவர்கள் சொன்ன 'ரெட்டை தண்டனை' என்ற வார்த்தை சிந்திக்க வைத்தது.

முதலில் மயிலையில் தனி வீட்டில் நீண்ட காலங்களாகத் தனித்து வாழும் என் சிநேகியை அழைத்து பேசினேன். சற்றே பிரபலமானவர், ஆண்டவனிடம் கணவரும், அயல்நாட்டில் பிள்ளை குடும்பமும் இருக்க, இங்கே ஆன்மீக இசையுரை நிகழ்ச்சிகளை தொடர்ந்து செய்து வருபவர் , திட மனதுடையவர். 'பகவான் அருளால் நன்றாக இருக்கிறேன். தனிமையை வெல்வது நமக்கு (என்னையும் சேர்த்துக் கொண்டார்) பழக்கம்தானே. என்ன, இப்போது இரட்டிப்புத் தனிமையை ஆனால் இறைவாசிப்பு அதனை சமாளிக்கிறது' என்றார் இந்த ஆன்மீக ஆராய்ச்சியாளர். திட மனதும் இறை நம்பிக்கையும் இவரின் பலம்.

இரண்டாவதாக நான் அழைத்துப் பேசிய நபர், மிக பிரபல எழுத்தாளர். வசதி படைத்தவர், தன் எழுத்துக்களின் மூலம் சிரிக்க வைப்பதில் வல்லவர். எண்பது வயது. மனைவிக்கு சற்று குறைவாக இருக்கலாம். மகன் குடும்பம் அயல் மாநிலத்தில், மகள் குடும்பம் அயல் நாட்டில். யாருக்கும் வரமுடியாத சூழல். கொரோனா ஊரடங்கில் உதவியாளர்கள் யாரும் எட்டிகூட பார்க்க முடியாத சூழல். இதில் தீவிர உடல் பிரச்சினைகள் வேறு. ''வேலைக்காரி வேலையும் பார்க்கமுடியவில்லை, வேளாவேளைக்கு ஒழுங்காக சாப்பிடவும் வழியில்லை. சமையலறை யுத்தகளமாக இருக்கிறது. ஐந்து நிமிடம் தூரத்தில் ஒரு பிரபல மெஸ் இருந்தது. ஒருவரை ஒருவர் பிடித்துக்கொண்டு நடந்து போய் சாப்பிட்டு வந்துவிடுவோம். இப்போது அதற்கும் வழியில்லாமல் இருக்கிறது. மெஸ் மூடிவிட்டார்கள், ஆட்கள் வரவில்லை என்று ஆன்லைன் வர்த்தகம் மூலம் சமாளிக்கிறோம். தனித்திருப்பது புதிதல்லவே. தினம் ஓரிருவர் வந்து போவார்கள். இப்போது அதுவும் நின்று போய்விட்டது. (டபுள் பனிஷ்மென்ட்) இதுவும் கடந்து போகும்'' என்றார்.

மூன்றாவதாக என் பள்ளிகூட தலைமை ஆசிரியை. தனி ஒருத்தியாகவே வாழ்க்கையை நகர்த்தியவள். இப்போது 90 வயது. வெகு தொலைவில் பிரபலமான முதியோர் இல்லத்தில் அளவுக்கு மீறிய பணத்தை அள்ளிக்கொடுத்துக்கொண்டு வாசம். இவர் கலியுகத்து மீரா. கண்ணனைத்தவிர வேறு எதுவும் தெரியாது. கள்ளம் கபடமற்ற பற்று அவன் மீது. இன்றும் தன்னருகே கண்ணன் பொம்மையை அலங்கரித்து வைத்துக் கொண்டிருக்கிறார். தனக்கு வழங்கப்படும் உணவினை அவனுக்கும் சமர்பிக்கிறார். இதற்கு முன்பு அவர் இருந்த சொந்த வீட்டில் இந்த கண்ணன் பொம்மைக்குத் தன் கைகளாலேயே நந்தவனம் அமைத்து வைத்துக் கொண்டிருந்தார். பணக்கார சபரி, குசேலர் என்று கூட இவரை சொல்லலாம். அற்புதமான கவிதைப் படைப்பாளி. கண்ணனின் மீது இவர் எழுதிய கவிதைகளுக்கு இசையாசிரியையான என் அம்மா, (நாங்கள் மூவரும் ஒரே நேரத்தில் ஒரு பள்ளிக்கூடத்தில் இருந்தோம். நான்

மாணவி, என் அம்மா இசையாசிரியை, இவர் எங்கள் தலைமை ஆசிரியை) இசையமைத்து மிக அழகாகப் பாடும்போது கேட்போர் மனம் உருகிவிடும். சொற்களும் அதற்கேற்ற இசையும் உள்ளம் நெகிழ வைக்கும். இறக்கும் தருவாயில் என் அம்மா என்னிடம் கேட்டுப் பெற்ற வரங்கள் இரண்டு அதில் ஒன்று இந்த தலைமை ஆசிரியையை, உயிரோடு இருக்கும் வரையில் நான் அவசியம் சென்று பார்த்துவிட்டு வரவேண்டும் என்பதே. நானும் அதனை சிரமேற்கொண்டு செய்து கொண்டிருக்கிறேன். சிரித்துக் கொண்டே இருப்பது இவரின் சிறப்பு.

இப்போதும், இந்த வயதிலும், முதியோர் இல்லத்து அறையிலும் கூட சிரித்துக்கொண்டே தான் பேசுவார், இருபதுக்கும் மேற்பட்ட கவிதைப் புத்தகங்களை வெளியிட்டுள்ளார். அத்தனையும் பக்திப்பாடல்கள். சிலவற்றை இசையமைத்து பள்ளிக்கூடத்தில் பிரார்த்தனை பாடலாகக் கூட பாடியுள்ளோம். எப்போது சந்திக்கப் போனாலும், அவரின் பாடல்களில் ஒன்றை பாடச் சொல்லிக் கேட்பார். இலக்கியம் மற்றும் இன்றைய அரசியல் விவாதிப்பார். அப்படிப்பட்டவர் கொரோனா நேரத்தில் உதவியாளர் யாரும் இல்லாத சூழலில், வாக்கரின் உதவியுடன் நடந்து குளியலறை, கழிவறை வேலைகளை முடித்துக்கொண்டு, தன் புடவையைத் தானே தோய்த்து உலர்த்திக்கொண்டு இருக்கிறார் என்று கேள்விப்பட்டவுடன் மனம் ரொம்பவும் கலங்கியது. "ஒரு கண்ணு வேற போச்சு ஷ்யாமா, இப்பதான் பகவானுக்கு என் ஞாபகம் வந்து ஒண்ணு ஒண்ணா பிடுங்க ஆரம்பிச்சிருக்கான்." என்று சொல்லும்போது சிரித்தார்.

முதியோர் இல்லத்திலுள்ள முதியோர்களுக்கும் இந்த கதியா? கையிலும் வங்கியிலும் காசு இருந்து என்ன பிரயோஜனம்? 'ஜாக்கிரதையாக இருங்க மேடம். உங்களுக்கும் நான் எப்படி வந்து உதவுவது என்று எனக்குத் தெரியவில்லையே' என்றேன். "உனக்கு அறுபது, எனக்குத் தொண்ணூறு. என்னைப்பற்றி கவலைப்படாதே. கண்ணன் எப்போதும் என்னுடனேயே இருக்கான். அவன் என் கையை பிடிச்சிண்டு கூடவே வரான்." என்று சொல்லிவிட்டு கலகலவென்று சிரித்தார்.

இந்த தடை முடிஞ்சதும் என்னை வந்து பாரு என்றார். அவரின் மன உறுதியை, இறை நம்பிக்கையை என்னுள்ளும் கொஞ்சம் ஏற்றிக்கொள்ள முயற்சிக்கிறேன். இனிக்க இனிக்க, சிரிக்க சிரிக்க பேசும் அந்த ஆசிரியையின் பெயர் வேம்பு.

இன்னொரு முதியவரைப் பற்றி நான் சொல்லாவிட்டால் நன்றி கெட்டவளாகி விடுவேன். இன்றும் என் தந்தை ஸ்தானத்தில் இருத்திவைத்திருக்கும் நெருங்கிய உறவினர். வயது 82. மனைவிக்கு ஐந்து வயது குறைவாக இருக்கலாம். நீண்ட வருடங்களாக அதிகம் நிற்கவோ, நடக்கவோ இயலாதவர். வாக்கரின் உதவியுடன் சற்றே இயங்குகிறார் அந்த மனைவி சமையல் மாமி, வீட்டு வேலைக்காரி, டிரைவர், நர்ஸ், உடற்பயிற்சியாளர் ஆகிய உதவியாளர்கள் இல்லாமல் எதுவும் முடியாது என்ற நிலைதான். கொரோனா கால கட்டம் ஈ, காக்காய் கூட எட்டிப்பார்க்க முடியாத சூழலாகி விட்டது. கொரோனா தீவிரம் அடைவதற்கு சற்று முன்பு கீழே விழுந்து விட்டார். எல்லாம் படுக்கையில் என்ற நிலை. தந்தை போன்ற உறவினர் முன்னாள் ராணுவ வீரர். இந்தியா-பாகிஸ்தான் எல்லையை சமாளித்தவர், அன்பு மனைவியை சமாளிக்க முடியாதா என்ன? சந்தோஷமாகவே சமாளித்துக் கொண்டிருக்கிறார். சிறு அலுப்பு இல்லை, யாரையும் குறை கூறவில்லை. குழந்தைகள் வெகுதூரத்தில் தொலைபேசியில் நெருக்கம் காட்டுவதற்கு மட்டுமே அவர்களால் முடிகிறது. நான் தொலைபேசியில் விசாரித்தபோது, ராணுவ வீரனுக்கே உரிய கம்பீரத்துடன் பேசினார். ‘‘நளபாகம் நான் தான், வேலைக்காரியும் நான்தான், நர்சும் நான்தான், இப்போது அவளுக்கு சற்று தேவலையம்மா, கொஞ்சம் நடந்து வந்து எனக்கு உதவுகிறாள். ஒன்றும் பிரச்சினை இல்லை. கடவுள் இருக்கிறான். பார்த்துக்கொள்கிறான்.’’ என்றார். இவர் எங்கள் குடும்பத்திற்கு பீஷ்மர் மாதிரி.

இவர்களின் மனதிடம் என்னை வியக்கவைக்கிறது. முதுமை அவர்களை முடக்கிப் போடவில்லை. மனதை உடைத்துப் போடவில்லை. எப்படி இது சாத்தியம்? அவர்களிடம் கேட்டேன் முதுமை சாபமா? வரமா? என்று.

ஒருமுகமாகச் சொன்னார்கள். “இது யதார்த்தம், இயற்கை, ஒருவகையில் இனிமை என்றுகூட சொல்லலாம்” என்றார்கள்.

“எப்படி இனிமை?”

இந்த இயற்கையையும் யதார்த்தத்தையும் ஏற்றுக்கொண்டு விட்டால் இனிமைதானே! நம்மை பற்றியே சிந்தித்துக்கொண்டு நம் குழந்தைகள் நம்மை எதிர்பார்க்காமல் தங்கள் கடமைகளை செய்து கொண்டிருக்கிறார்கள். பேரன் பேத்திகள் நலம் விசாரித்துக் கொண்டு, ஆசிகள் வேண்டிக் கொண்டு நம்மை வெகு உயர்வாகவே கருதிக்கொண்டிருகிறார்கள் நம்மை பற்றியே சிந்தித்துக்கொண்டு இறைவன் நமக்குத் தேவையான சக்தியைக் கொடுத்துக் கொண்டே இருக்கிறான். வேறு என்ன வேண்டும். இதுவும் கடந்து போகத்தானே செய்யும்.

பெங்களூர் நண்பருக்கு அனுப்பிய வரிகளை அடுத்த மாதம் உங்களுக்குத் தெரியப்படுத்துகிறேன்.

டாக்டர் ஷ்யாமா ஸ்வாமிநாதன்.


# வருந்துகிறோம்



சென்னை வேளச்சேரி ஸ்ரீமான் ஜம்புநாதன் மாமா அவர்கள் 26.01.2020 அன்று இறைவனடி சேர்ந்தார்கள். வேதபாரதிக்கு ஸ்ரீ ஜம்புநாதன் மாமா ஆரம்ப காலம் முதல் நல்லாதரவு கொடுத்து வந்த உத்தமபுருஷர். அவரை இழந்து வாடும் குடும்பத்தாருக்கு வேதபாரதியின் ஆழ்ந்த இரங்கலை தெரிவித்துக் கொள்கிறோம். ஸ்ரீ ஜம்புநாத மாமா ஆன்மா சாந்தி அடைய வேதபாரதி சார்பில் பிரார்த்திக்கிறோம்.

# சிருங்கேரி ஜகத்குரு ஸ்ரீ அபிநவ வித்யாதீர்த்த மஹா ஸ்வாமிகள் அருளியவை

## பக்தியின் நிலைகள்



ஆதிசங்கரபகவத்பாதாள் தமது சிவானந்தலஹரியில், பக்தியின் வெவ்வேறு நிலைகளைப் பல உதாரணங்களோடு மிக அழகாக விவரித்துள்ளார். முதலில், பக்தன் பிரயத்தனப்பட்டு தன் மனதை இறைவனின் பக்கம் திருப்பி, அதை அவருடைய பாதங்களில் வைக்கிறான். அங்கோல மரத்தின் விதையானது, தன் தாய் மரத்தோடு ஒட்டிக் கொண்டிருப்பதை இதற்கு உதாரணமாகக் கூறுகிறார் சங்கரர். இறைவனிடத்தில் பக்தன் தன் மனதைச் செலுத்தியதும், அவர் அவனுக்குப் பல விதங்களிலும் அனுகூலமாக இருந்து அருள்கிறார். பக்தன் தம்மை விட்டுப் பிரிந்து செல்லாமலிருப்பதற்காக, இறைவன் அவனைத் தம்மை நோக்கி இழுத்துக் கொள்கிறார் என்று பக்தியின் இரண்டாவது நிலை விவரிக்கப்பட்டுள்ளது. காந்தத்தை நோக்கி ஊசி ஈர்க்கப்படுவதைத்தான் இந்நிலைக்கு உவமையாகக் கூறுகிறார் பகவத்பாதாள்.

பக்தனின் உள்ளம் இறைவனிடத்தில் பரிபூரணமாக நிலைத்துவிட்டதேயானால், அப்பொழுது இறைவன், தமது பங்கிற்கு, பக்தனிடத்தில் எல்லையில்லா அன்பைப் பொழிகிறார் என்று பக்தியின் மூன்றாவது நிலையை சுலோகம் விவரிக்கிறது. ஒரு பதிவிரதை கணவனுக்கு அன்புடன் சேவை புரியும்போது, எப்படி பதிலுக்கு கணவன் அவளிடத்தில் தனது அன்பைப் காட்டுவானோ, அப்படியுள்ளதாம் இந்த மூன்றாவது நிலை.

பக்தனின் பிரேமை வளர வளர, அவன் இறைவனுக்கு ஓர் ஆபரணமாகவே ஆகிவிடுகிறான். உண்மையில், பிரஹ்லாதன்

என்று ஒரு பக்தன் இல்லாதிருந்தால், இறைவன் நரசிம்மராக அவதாரமெடுத்து உலகை இரக்ஷித்திருக்க மாட்டார். ஆகையால் ஒரு விதத்தில் பார்த்தால், பக்தனால் இறைவனின் புகழ் மேலும் உயர்கிறது என்றே கூறலாம். இதுவே பக்தியின் நான்காவது நிலையாகும். ஒரு மரத்தைச் சுற்றிப் படர்ந்திருக்கும் ஒரு கொடி, இந்நிலைக்கு மேற்கோளாகக் கூறப்பட்டுள்ளது. நான்காவது நிலையைக் கடந்ததும், பக்தன் இறைவனோடு முழுமையாக ஐக்கியமாகி விடுகிறான். இதுதான் பக்தியின் உன்னத நிலையாகும். கடலில் சென்று கலக்கும் ஒரு நதியைப் போல், பக்தன் இறைவனுடன் இரண்டறக் கலந்துவிடுகிறான் என்று பக்தியின் கடைசி நிலை எடுத்துக்காட்டப்பட்டுள்ளது. நதி கடலைச் சென்றடைந்துவிட்டால், பிறகு அதனைக் கடலிலிருந்து வேறுபடுத்திக் காண்பது என்பது இயலாது. அதேபால், பக்தனும் இறைவனிடத்திலிருந்து பிரிக்க முடியாதவனாகி விடுகிறான்.

(தொடரும்)


**ஜாதக பரிவர்த்தனைக்கு அணுகவும் :**

எண்.9, பழனி ஆண்டவர் தெரு,
ராதாநகர், குரோம்பேட், சென்னை - 600 044.

| | |
|---|---|
| **திருமதி. தனலட்சுமி** | **திருமதி. ராஜலட்சுமி** |
| **9444140119** | **7092199447** |

**ஜாதக பரிவர்த்தனைக்கு**

புதுவையில் பதிவு செய்ய விரும்புவோர் அணுகவும் :

| | |
|---|---|
| **ஸ்ரீ பாலசுப்பிரமணியன்** | **ஸ்ரீ நடராஜன்** |
| **9442094380** | **9443103404** |

# SRI MATHA TRUST



V.KRISHNAMOORTHY
Founder & Managing Trustee

Since year 2000 a real sanctuary for ailing poor cancer victims




## AN INCREDIBLE CHAMPION



Addressing pain with compassion

V.KRISHNAMOORTHY
Sri Matha Trust, Adyar

(space constraint - hence only excerpts - from a book published during 2017 by **Prof.N.Chandrasekaran** Faculty, Loyola Institute of Business Administration, Chennai) Notion Press, Chennai - 31.

### Author's Introduction

Stories that tell of journeys from humble backgrounds to stardom, wealth and power are rare stories of public lives that make folklore and movies. There are many unnoticed personalities who came from not-so cosy backgrounds, and yet, are into social life in a big way. A big way because they make their primary purpose in life the relieving of pain of many deprived less fortunate humans!

People who are in pain look for compassion, love and warmth, not just money or other material support! Imagine a thirty-two year old man who is married and living with a young wife and a, two-year-old-daughter. He is diagnosed as suffering from cancer. He spends all of his money and gets into debt. His spouse does not earn an income. There is no emotional support available, as their families were small and dwindled. What is it that the couple and their child need most? Money, empathy or someone promising to stick around to help them go past this unfortunate situation! Ideally speaking, the man needs



நம்ம தர்மசாலாவில் மகிழ்ச்சியுடன் தங்கியிருக்கும் ஏழை புற்றுநோயாளிகள்

to be in a place that provides care till he gets cured. Cancer is curable if identified and attended to at an early stage. Rural poor people who suffer from cancer come to cities for treatment. Amongst the issues on which they desperately need help are places to stay for themselves and their caretakers.

In Chennai, Mr.V.Krishna moorthy runs a free Dharmasala with food and shelter since year 2000, which provides such care and support not only to patients, but also to the caretakers who accompany the patients.

## Author's Conclusion

Krishnamoorthy treats every man and woman like his own children. At all times, he puts his best foot forward to bring about improvement in the patients' care. When the patients and care-takers feel they are receiving genuine concern, they feel comfortable. This could be transitory! But it is essential in managing the kind of crisis created by disease like cancer. There is, of course, much pain and sorrow engulfing patients and caretakers. Someone needs to share the burden and make the rest of the family see a light in the darkness, a future after torment. You must spend time with Krishnamoorthy at the Trust premises as an observer. You will feel the enormous energy and positive spirit that galvanise the place. His own helplessness and desperation when his mother passed away for want of proper medical attention at his young age and his family's inability to afford the best of food had hit Krishnamoorthy hard. Hence, he has committed himself to helping as many people as possible in similar conditions, with great devotion.



புற்றுநோயாளிகளுக்கு உணவு பரிமாறும் செயல் அறங்காவலர் திரு.ஆகாஷ்ராம்

Giving what you could not have is a great way of approaching life. I may not have completely portrayed what and how I felt after meeting Krishnamoorthy.



A 'fatherly pat' cheers the ailing poor cancer victim, who suffers acute body pain...

I wish cancer has a cure. At the least, I wish disease like cancer are not so severe as to require the services of Krishnamoorthy and his ilk.
We all know how such thoughts are wishful, and will probably remain so!
Pray to God to balance the world by blessing us with kind souls like Krishnamoorthy!



There is nothing more beautiful than someone who goes out of their way to make life beautiful for others !!!

This is Krishnamoorthy...You would agree on meeting him.

சாதி, மதம், இனம், மொழி பேதங்களைக் கடந்து, அன்பு என்னும் ஒற்றை வார்த்தையில் கட்டமைக்கப்பட்டதே ஏழை புற்றுநோயாளிகளின் ஒப்பற்ற புகலிடமான ஸ்ரீ மாதா டிரஸ்ட் நிர்வகிக்கும் **"நம்ம தர்மசாலா"**.

அடையாறு கேன்சர் மருத்துவமனைக்கு சிகிச்சைக்காக வெளியூர்களிலிருந்து வரும் ஏழை புற்றுநோயாளிகளை நம்ம தர்மசாலா தாயுள்ளத்துடன் அரவணைத்துக் கொள்வதால், ஏழை புற்றுநோயாளிகள் தடையின்றி சிகிச்சை பெற்றுக்கொண்டு, அவர்களது நோய் முற்றி அடுத்தடுத்த நிலைக்குச் செல்வது தடுக்கப்பட்டு, அவர்களது எதிர்காலம் மீட்டெடுக்கப்படுகிறது.

நம்ம தர்மசாலாவில் ஏழை புற்றுநோயாளிகளுக்கும், அவரது ஒரு உதவியாளருக்கும் பாதுகாக்கப்பட்ட குடிநீர், சுத்தமான கழிப்பறை வசதியுடன் கூடிய பாதுகாப்பான தங்குமிடம்; மூன்று வேளையும் சத்தான, சுவையான, சைவ உணவு; காபி/டீ/பால்/ சத்துமாவு கஞ்சி / வேகவைத்த சுண்டல், மருத்துவர் பரிந்துரைக்கும் மருந்து/மாத்திரைகள்; பண்டிகை தினங்களில் புத்தாடைகள் என அனைத்தும் முற்றிலும் இலவசமாக வழங்கப்படுகிறது.

இத்தனை சேவைகளையும் ஸ்ரீ மாதா டிரஸ்ட், ஏழை புற்று நோயாளிகளிடமிருந்து ஒரு ரூபாய்கூட வசூலிக்காமல் இத்தனை ஆண்டு காலம் சற்றும் தொய்வின்றி,

திருவான்மியூரைச் சேர்ந்த திரு.குப்புசாமி அவர்கள், தனது பேரன் செல்வன் ஸ்ரீ கிருஷ்ணசர்மா அவர்களின் உபநயன தினத்தன்று, ஏழை புற்று நோயாளிகளுக்கு உணவு வழங்கிட நன்கொடை வழங்கி, தனது அனுபவத்தை எங்களது வருகையாளர் பதிவேட்டில் பதிவுசெய்து மகிழ்ந்தார்.

"Krishnamoorthy sir is doing a wonderful job for the society, which can't be measured by any words."



அனைவரும் போற்றத்தக்க வகையில் செய்து வருவதற்கு உங்களைப் போன்றோரின் மனிதநேயம் மிக்க மனங்களே காரணம் என்றால் அது மிகையல்ல.

ஸ்ரீ மாதா டிரஸ்ட் தனது சேவை பயணத்தின் அடுத்த முயற்சியாக ஏழை புற்றுநோயாளிகளுக்காக அனைத்து வசதிகளும் கொண்ட, மற்றுமொரு பிரத்யேக காப்பகத்தை, கேன்சர் மருத்துவமனைக்கு அருகில், ரூ.5 கோடி திட்ட மதிப்பீட்டில், சுமார் 200 படுக்கை வசதிகளைக் கொண்ட ஒரு கட்டிடத்தை சொந்தமாகக் கட்டி அதில் நிறுவிட ஸ்ரீ மாதா டிரஸ்ட் முடிவு செய்துள்ளது. இன்றுவரை எங்களது சேவைப் பணிக்கு உறுதுணையாய் இருந்து வரும் மனிதநேயம் மிக்க நன்கொடையாளர்களான நீங்கள், எங்களது இந்த புதிய முயற்சிக்கும் தங்களது நல்லாதரவை வழங்கி, ஏழை புற்றுநோயாளிகளை காத்திட வேண்டுகிறோம்.




Here you see a learned Chartered Accountant Shri G.NAGANATHAN (R.K.Kumar & Co.) along with his wife Smt UMA testifying the bonafides of our service to poor cancer victims

**தங்களது நன்கொடையை இவ்வாறு வழங்கலாம்**

• ரூ.1,00,000/- நிதியளித்து நிரந்தர காப்பாளர் ஆகலாம் • ரூ.75,000/- நிதியளித்து வள்ளல் ஆகலாம் • ரூ.25,000/- நிதியளித்து ஒரு நாள் "**நம்ம தர்மசாலா**"வின் செலவினை ஏற்கலாம் • ரூ.10,000/- நிதியளித்து ஒரு நாள் உணவு செலவினை ஏற்கலாம் • ரூ.5,000/- நிதியளித்து மதிய / இரவு உணவு செலவினை ஏற்கலாம் • ரூ.3,000/- நிதியளித்து காலை உணவு செலவினை ஏற்கலாம்

**Kindly donate towards our building fund any amount and become an active participant in this noble cause**

Kindly send your contribution by CHEQUE / NEFT / Money Order

Account Name : **SRI MATHA TRUST**

Bank Name : INDIAN OVERSEAS BANK, Gandhi Nagar, Chennai-20.

Current A/c No.:163502000001090 IFSC Code:IOBA0001635

Donations to our Trust is exempted U/S.80 (G) of the Income Tax Act. After doing this benevolent act kindly SMS your postal mailing address or kindly e-mail the donation details to enable us send our receipt.

Kindly visit our "Namma Dharmasala"

Admin Office: 95/6, Rams Apartment, 2nd Main Road, Gandhi Nagar, Adyar, [next to Harini Skin & Laser Clinic] Chennai - 600 020. Tel: 044 - 2442 0727, 044 - 4266 1687

Namma Dharmasala: 9, Yogi Garden, Sriram Nagar Main Road, Adjacent to IIT Compound, Near New Cancer Institute, Chennai-113. Tel: 044-4509 8647

Regd. Office: "Natha Kamalam", No.1-A, Periazhwar Street, Sundaram Colony, East Tambaram, Chennai - 600 059.

Mobile: 94440 01065 / 93810 20727 / 90032 47857

Email: vkrishnamoorthy.smt@gmail.com www.srimathatrust.org

and extend your helping hand...

## மஹா பெரியவாளின் அற்புத விளக்கங்கள்

*சென்றமாத தொடர்ச்சி...*

### இது எப்படி? எதற்காக இப்படி இருக்க வேண்டும்?



*ஸ்ருஷ்டி, ஸ்திதி, ஸம்ஹாரம் ஆகிய சகலத்தையும் செய்கிற பரமாத்மா ஒன்றேதான் இருக்கிறது. அதுவே தான் இத்தனை தெய்வங்களாகவும் ஆகியிருக்கிறது. எதற்காக? இந்த லோக வியாபாரம் ருசியாக இருக்க வேண்டும் என்பதற்காக எல்லா ஜனங்களையும் ஒரே அச்சாகப் படைக்காமல் பலதரப்பட்ட மனோபாவத்துக்கும் பிடித்த மாதிரி பரமாத்மாவும் ஒவ்வொரு ரூபத்தை எடுத்துக் கொண்டால்தான் அவரவரும் தங்களுக்குப் பிடித்ததை இஷ்ட தேவதையாய்க் கொண்டு உபாஸித்து நல்ல கதியைப் பெறமுடியும். அதற்காகத்தான் ஒரே பரமாத்மா பல தெய்வரூபங்களை எடுத்துக் கொள்கிறது.*

*ஒவ்வொருவருக்கும் தங்கள் இஷ்ட மூர்த்தியிடமே அசையாத நம்பிக்கை ஏற்பட வேண்டுமல்லவா? "இதுதான் பரமாத்ம ஸ்வரூபம், பரப்பிரம்ம ஸ்வரூபம். இதற்கு மேல ஒரு சக்தியில்லை'' என்ற உறுதியை அவர்களுக்கு ஊட்ட வேண்டுமல்லவா? அதற்காகத்தான் ஒவ்வொரு ரூபத்திலும் தான் வந்தபோது மற்ற ரூபங்களையெல்லாம் ஒரே பரமாத்மாவின் லீலா விநோதம்தான்; அந்த ஒன்றே தான் தன்னை வெவ்வேறு மனோபாவக்காரர்கள் அநுபவிக்கும் படியாக வெவ்வேறு தெய்வம் போல ஆக்கிக் கொண்டு இத்தனை கூத்தும் அடிக்கிறது என்று புரிந்து கொண்டு ஒன்றுக்கொன்று முரணாகத் தோன்றுகிற எல்லாக் கதைகளையும் ரஸிக்கவும், பக்தி செலுத்தவும் முடிகிறது.*

*பாணாஸுரன் வதையிலே சிவன் கிருஷ்ணனிடம் தோற்றுப் போகிறாரா? திருவண்ணாமலைக் கதையிலே விஷ்ணு சிவனுடைய அடியைக் காணமுடியாமல் தோற்றுப் போகிறாரா? இரண்டும் ஸத்யந்தான். கிருஷ்ண பக்தர்களை அவர்தான்*

பரமாத்மா என்று நம்பப் பண்ணுவதற்காக ஈச்வரன் தயங்காமல் கிருஷ்ணனிடம் தோற்றுப் போகக் கூடியவர்தான். சைவர்களுக்கு ஈச்வரனிடம் பிடிப்பை உறுதியாக்க வேண்டும் என்பதற்காக 'விஷ்ணு தம்மையே குறைத்துக் கொண்டு ஈச்வரனிடம் தோற்கக் கூடியவர் தான். நாம் ஜயித்தவர் - தோற்றவர் என்று வித்யாஸமாக நினைத்தாலும் அவர்களுக்குத் தாங்கள் வேறு இல்லை ஒருவரேதான் என்று தெரியுமல்லவா? தன்னையே ஜயித்துக் கொள்வதாவது? தன்னிடமே தோற்றுப் போவதாவது? அதனால் இதெல்லாம் விளையாட்டுத்தான். இப்படி ஒரே பரமாத்மா பல ரூபம் எடுத்துக் கொண்டு லீலை செய்கிறது.

இன்னொரு காரணமும் உண்டு. ஜனங்களுக்கு வழி காட்டியாக இருப்பதுதான் அது. லோகத்தில் பாதில் ரத்யம் (கற்பு நெறி) இருக்க வேண்டும் அதனால் அம்பாளே பதிவிரதைகளுக்கெல்லாம் வழி காட்ட வேண்டும். அப்போது தான் பராசக்தியாக இருந்தாலும் பதிக்கு அடங்கி ஒடுங்கின வளாகத்தானே இருக்க வேண்டும்? லோகத்தில் பக்தி விருத்தியாக வேண்டும். இதற்காக பகவானே வழி காட்ட வேண்டும். அதற்காகத்தான் சில கதைகளில் சில க்ஷேத்ரங்களில் விஷ்ணுவே பக்தனாக இருந்து கொண்டு ஈச்வரனுக்குப் பூஜை செய்கிறார். வேறு சில கதைகளில் க்ஷேத்ரங்களில் சிவன் விஷ்ணுவுக்குப் பூஜை பண்ணுகிறார். மற்ற தெய்வங்களும் இப்படியே, பொதுவாக சைவம், வைஷ்ணவம் என்ற நாம் பெரிய பிரிவுகளாகப் பிரித்திருப்பதால் ஈச்வரன், விஷ்ணு என்ற இரண்டையே அதிகம் சொல்கிறேன்.

ஆக, புராணங்களிலே ஒன்றுக்கொன்று வித்தியாசமாக, இந்த ஸ்வாமிதான் உசத்தி என்றும், அந்த ஸ்வாமிதான் உசத்தி என்றும் காட்டும்படியான கதைகள் வருவது அந்தந்தக் குறிப்பிட்ட சமயத்தில் ஒன்றிடமே இதுதான் பரமாத்மா என்று நாம் ஆழமாக ஈடுபட்டு நிற்பதற்காகச் சொன்னது என்றே எடுத்துக் கொள்ள வேண்டும். ஒன்றைத் தாழ்த்தியது போல் சொன்னது உண்மையில் அதை நிந்திப்பதற்காக இல்லை; இன்னொன்றை இதுவே சகலமும் என்று கெட்டியாகப் பிடித்துக் கொள்ளச் செய்வதுதான் இதன் உத்தேசம்.

# பெற்றோர்களே! கவனியுங்கள்!

## (குழந்தை வளர்ப்பு)

காந்தலக்ஷ்மி சந்திரமௌளி பாகம் - 2 பகுதி - 44

'வன்முறை' என்பதை செயலில், பேச்சில், உணர்வில் காண்பிப்பது என்பது பெற்றோர்களுக்கே உரியது. அவர்கள் இதற்கு பெயர் வைத்திருப்பது "சரியான வழிக்கு கொண்டு வருவது" என்பதாகும்.

"அன்பொழுக, பூசி மொழுகி எனக்கு பேசத் தெரியாது மேடம்" என்று என்னிடம் கோபத்தில் வெடிக்கும் தாய்மார்கள் ஏராளம். "அதையெல்லாம் செய்ய வேண்டாமே" என்று நான் எப்பொழுதும் போல மென்மையாகக் கூற 'ஞே' என்று விழிப்பவர்கள் மிக அதிகம்.

எப்படி குழந்தைகளிடம் பேசுவது என்று காண்போம். சென்ற மாதம் வீட்டில் ஒரு அபார காரியம் நடந்துவிட்டது என்று வைத்துக் கொள்வோம். 'நெருப்பு என்றால் வாய் வெந்துவிடாது' என்று நினைவில் கொள்க!

அத்தகைய சமயத்தில் 10 வயதைத் தாண்டிய மகன் அல்லது மகளை தன் பக்கத்தில் இருத்திக் கொள்ள வேண்டும். ஏனென்றால் அந்த காலம் போல இன்று துக்கம் கொண்டாட உறவுக்கூட்டம் வருவதில்லை. நகரத்தில் இன்று இருக்கும் அவசரகதி வாழ்க்கைக்கு, வருவது என்பதே மிகக்கடினம். அதிலும் வந்து துக்கம் அனுசரிக்க நினைக்கும் மூத்தோரை அழைத்துவர, அழைத்துச் செல்ல, மருந்து மாத்திரைகள் கொடுக்க என்று அடுத்த தலைமுறை பாடுபட நேரமேது?

அதனால் இத்தகைய சமயத்தில் அவர்களுக்கு பெற்றோரின் அருகாமை மிகவும் தேவை. அவர்களுக்குள் ஏற்படும் கேள்விகளை கேட்கத் தயங்கி மனதிற்குள்ளேயே புதைந்துவிடும். "இறப்பு என்றால் என்ன? நாளை நானும் இதுமாதிரி... ஐயோ... அம்மா... அப்பா? என்று மனதில் எழும் கேள்வியை எப்படி,

*யாரிடம் கேட்பது?" என்று உள்ளூர திகைத்து நிற்பார்கள்.*

*இத்தகைய சமயத்தில் எல்லாம் முடிந்து சிறிது ஓய்வு கிடைக்கும் பொழுது சமமாக பாவித்து பேச வேண்டியது பெற்றோர்களின் தலையாய கடமை. அதுவரை உங்கள் அருகாமை அளித்த தன்னம்பிக்கை கூடி, நம் மதம், நம் உறவு முறைகள், நம் வீட்டு பழக்க வழக்கங்கள், உணவு வகைகள் என்று எத்தனை விஷயங்கள் உள்ளன என்று அவர்களுக்கு புரியும்.*

*"நேற்று கூட ஏதோ அற்ப காரணத்திற்காக கோபித்துக் கொண்டு விட்டேன். (அது உங்கள் மாமியார், மாமனார், அத்தை, அம்மா, அப்பா என்று யாராக வேண்டுமானாலும் இருக்கலாம். நேர்பட உண்மையை பேசி விடுங்கள்.) "அந்த கோபத்திற்காக இன்று ரொம்ப வருத்தப்படுகிறேன்" என்று கூறுங்கள்.*

*"பாட்டி / தாத்தா மேலே சலிப்பு இல்லையடா. இப்படி அவர்கள் கஷ்டப்படுவதை சகிக்க முடியலை" என்று மிக லேசாக, வயதாகி, கடமைகள் முடிந்த பிறகு இறப்பு என்பது இறைவனை அடையும் வழி என்று எடுத்துக் கூறுங்கள்.*

*இன்று பல குழந்தைகள் இத்தகைய தெளிவின்றி 20 வயதில் கூட கவுன்சிலிங்க் தேவைப்படுவதை காண மிகவும் கஷ்டமாக உள்ளது. மனதிற்குள் புகுந்த பயம், அப்பா அம்மா மீது ஏற்படும் வெறுப்பு, என்று பெற்றோரை எதிர்த்துக் கொண்டு கிளம்பும் குழந்தைகள் மிக அதிகம்.*

*மரணத்தை எதிர்கொள்வதில் சரியான வழிகாட்டுதல் இல்லையெனில் 'தீவிரமான மன அழுத்தம்'* (Acute Stress Reaction) *அல்லது 'நீண்ட கால மன அழுத்தம்'* (Extended Grief Reaction) *ஏற்படும்.*

*பிறப்பு, இறப்பின் முக்கியத்துவம், அதுதானே இயற்கையாக எற்படும் சூழ்நிலை, நம் புராணங்கள், இதிகாசங்களில் இதைப்பற்றி கூறியுள்ளவை என்று அவர்களுக்கு புரிய வைக்கும் அரிய சந்தர்ப்பம்.*

*உற்ற நண்பர்கள் சாலை விபத்துகளில், தற்கொலை என்று பலவற்றை இன்று சிறுவர் - சிறுமியர் சந்திக்கின்றனர். இந்த குழப்பத்துடன் மனரீதியாகப் பாதிக்கப்படுபவர்கள் மிக, மிக அதிகம். காலம் கடந்து மருத்துவரைத் தேடுவதில் பயனில்லை.*

**"உளரெனினும் இல்லாரொடு ஒப்பர் களன்அஞ்சிக்**
**கற்ற செலச்சொல்லா தார்."**

*(அதிகாரம் - 73 - அவையஞ்சாமை - குறள் 730)*

அவைக்களத்தை கண்டு அஞ்சி தாம் கற்றவற்றை அதற்கு ஏற்ப சொல்லமாட்டதவர் உயிர் வாழ்கின்றாராயினும் இறந்தவற்கு ஒப்பானவரே.

தொடரும்....

# வேதபாரதி

28.04.2020 செவ்வாய் கிழமை சார்வரி வருஷம் சித்திரை மாதம் 15-ம் நாள் பஞ்சமி திதி அன்று ஸ்ரீமத் ஆதி சங்கரர் அவதாரதினம் வேதபாரதி அன்பர்களால் சிறப்பாக கொண்டாடப்பட்டது.

ஸ்ரீ தோடகாச்சாரியார் அருளிய ஸ்ரீ சங்கர பகவத் பாத ஸ்தோத்திரம் தோடகாஷ்டகம் 500க்கும் மேற்பட்ட சிறார்களுக்கு கொண்டு சேர்க்கும் வகையில் தோடகாஷ்டகம் பல ஊர்களில் குழந்தைகளுக்கு கற்றுக் கொடுக்க ஏற்பாடு செய்யப்பட்டது.

28.04.2020, செவ்வாய்கிழமை அன்று அவரவர் வீடுகளில் விளக்கேற்றி ஸ்வாமி அறைகளில் பாரம்பர்ய உடையணிந்து தோடகாஷ்டகம் பாராயணம் செய்து ஸ்ரீ சங்கரர் பகவானை பிரார்த்தனை செய்தார்கள்.

உலக நாடுகளில் பல ஊர்களில் உள்ள குடும்பங்களிலும் இந்நிகழ்ச்சியில் பங்கு பெற்று வீடியோ எடுத்து வேதபாரதிக்கு அனுப்பி வைத்து உள்ளார்கள். அடுத்த தலைமுறை குழந்தைகளுக்கு நம் லோக குரு ஸ்ரீ சங்கர பாகவத் பாதரின் பெருமையை கொண்டு சேர்த்த வேதபாரதி நிர்வாகத்தினர்கள் பெற்றோர்களுக்கு மனமார்ந்த நன்றி.

எல்லா குழந்தைகளுக்கும் சான்றிதழ், ஆதி சங்கரர் போட்டோ அனுப்பி வைக்க ஏற்பாடுகள் செய்து வருகிறார்கள் என்பதை வேதபாரதி நிர்வாகத்தின் சார்பில் தெரிவித்துக் கொள்கிறோம்.

நிர்வாகம், வேதபாரதி.

*ஸ்ரீ குருப்யோ நம:*

# வேதபாரதி
# கோவிட் - 19-யை வெல்வோம்

*கொரோனா என்னும் நோய்த் தொற்றிலிருந்து விடுபட பாரதப் பிரதமரின் வேண்டுகோளின் படி வேதபாரதி குழுவினர்கள் தனித்து தம் வீடுகளில் இருந்த போது செய்த சமுதயப் பணிகளில் சில :*

1. *தொடர்ந்து 5 வாரங்களாக தமிழ்நாட்டில் உள்ள முக்கிய நகரங்களில் வேதபாரதி குடும்பத்தினர்கள் ஸ்ரீ விஷ்ணு ஸஹஸ்ர நாம பாராயணம் கூட்டுப் பிரார்த்தனை செய்தோம். (25000 ஆவர்த்திகள் பூர்த்தி ஆகி உள்ளது)*
2. *பாண்டிச்சேரி வேதபாரதி நிர்வாகிகள் சீரிய முயற்சியாலும் கடினமான உழைப்பாலும் சிறந்த திட்டமிடுதலாலும் 220 மேற்பட்ட வசதியற்ற அந்தண குடும்பங்கள் குறிப்பாக திருக்கோவிலில் பணிபுரியும் அர்ச்சகர்கள், பட்டாச்சார்யார்கள், பரிஜாரகர்களுக்கு உதவித் தொகை கிடைத்திட அரும்பணி ஆற்றினார்கள். பயனாளர்களையும், நிதி வழங்குபவர்களையும் தொடர்பு கொள்ள வயதானவர்களுக்கு மருந்துகள் வாங்கவும், அத்யாவசிய செலவிற்காகவும் ஓர் குடும்பத்திற்கு ரூ.1500/- வீதம் வங்கி மூலம் கிடைத்திட ஏற்பாடுகள் செய்து கொடுத்தார்கள்.*
3. *பௌர்ணமி அன்று ஆயிரக்கணக்கான பெண்கள் அவர் அவர் வீடுகளில் ஸ்ரீ லலிதா ஸஹஸ்ர நாம பாராயணம் செய்து அம்பாளிடம் எல்லா குடும்பங்களும் நலம் பெற பிரார்த்தனை செய்தார்கள்.*
4. *வேளச்சேரியில் உள்ள தீபம் அறக்கட்டளை வாயிலாக தினமும் 500 பேருக்கு அன்னதானம் நடைபெறுகிறது. வேதபாரதியும் இப்புனிதப் பணியில் இணைந்து பொருளுதவி செய்தது.*
5. *கோடி காயத்ரீ ஜப யக்ஞம் நடைபெற வேதபாரதி*

*அன்பர்கள் வெகு சிரத்தையாக தினமும் 50000 ஆவர்த்திகள் ஜபம் செய்து இது வரை 4 லட்சம் பூர்த்தி ஆகி உள்ளது.*

6. *நமது ஸேவார்த்திகள் மூலம் 1000க்கும் மேல் ஸ்ரீ அனுமன் சாலிஸா பாராயணம் செய்துள்ளார்கள்.*
7. *நமது குடும்பங்களின் மூலம் ஸ்ரீ கந்தர் ஷஷ்டி கவசம் பாராயணம் வெகு சிரத்தையாக பாராயணம் செய்துள்ளார்கள்.*
8. *வசதி குறைவான தினக்கூலி தொழிலாளர்களுக்கு நம் நண்பர்கள் மூலம் 20 பேருக்கு மாத செலவுக்கு மளிகை சாமான்கள் வழங்கப்பட்டு வருகிறது.*
9. *2400க்கும் மேற்பட்ட சிறு கடை வியாபாரிகளுக்கு, பொதுமக்களுக்கு முகக்கவசம் வழங்கப்பட்டு உள்ளது.*
10. *தற்போது சகோதர அமைப்பான ராதா கிருஷ்ணா பஜன் மண்டலி நங்கநல்லூர் சார்பாக வசதி குறைவான 50 சிவாச்சார்யர்களுக்கு உதவித் தொகை வழங்கப்பட்டு வருகிறது.*
11. *திருக்கோவில்களில் பணிபுரியும் சுகாதாரப் பணியாளர்களுக்கு வேதபாரதி நல் உள்ளங்களின் ஆதரவோடு மளிகை பொருட்கள் வழங்கப்பட்டு வருகிறது.*
12. *கோவில்களில் வேத பாராயணம் செய்யும் வேத பண்டிதர்களுக்கு உதவித்தொகை வேதபாரதி நல் உள்ளங்களின் ஆதரவோடு வழங்கப்பட்டு வருகிறது.*

தினமும் சந்த்யா வந்தனம், அனுஷ்டானத்துடன் ஸகஸ்ர காயத்ரி ஜபிப்பவர்கள் தயவு செய்து தங்கள் விலாசத்தை வேதபாரதிக்கு அனுப்புமாறு கேட்டுக்கொள்கிறோம். நமது கலாச்சாரத்தை கடைபிடிக்கும் வேதபாரதி வாசகர்களை கௌரவிக்க விழாவிற்கு அழைக்கும் நோக்கோடு இச்செய்தி போடப்பட்டுள்ளது. **தொடர்பு : 9443495950**

# கை கொடுத்த வேதபாரதி

**“காலத்தினால் செய்த உதவி சிறிதெனினும்**
**ஞாலத்தின் மானப் பெரிது”**

என்ற வள்ளுவனின் வாக்கிற்கினங்க தடம் தெரியாமல் பெரிய உதவிக்கரத்தை எல்லா மட்டத்திலும் நீட்டியுள்ளது புதுவை வேதபாரதி.

“கொரோனா” ஊரடங்கு காரணமாக ஒட்டுமொத்த தேசமும் முடங்கியுள்ள நிலையில், கிட்டத்தட்ட அனைவருமே பொருளாதார ரீதியாக பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளனர்.

வேதபாரதியின் உறுப்பினர்களில் பெரும்பாலானோர் அன்றாட வருவாயை நம்பியே குடும்பம் நடத்துகின்றனர். இவர்களில், சிறு கோவில் பூஜை செய்யும் அர்ச்சகர்கள் (குருக்கள், பட்டாச்சார்யார்கள், தீட்சிதர்கள்), புரோஹிதம் செய்பவர்கள், சிரார்த்த போஜனம் செய்வோர், வைதீகாள் ஆகியோர் அதிகம்.

மக்கள் புழங்காத நிலையில் இவர்களது வாழ்வாதாரம் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளது. இவர்களில் சுமார் 90 சதவீகிதம் மேலானவர்கள் வாடகை வீட்டில் வசிப்பவர்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

இவர்களை “அமைப்பு சாரா தொழிலாளர்கள்” பட்டியலில் சேர்த்து நிரந்தரமாக உதவி தரவும், தற்போதைய அசாதாரண சூழலை கருத்தில் கொண்டு உடனடி நிவாரணம் தரவும், புதுவை வேதபாரதி தலைவர் என்.ஜே.எல்.ரமேஷ், துணைத்தலைவர் அட்வகேட் பட்டாபிராமன், செயலாளர் சந்திரசேகரன் ஆகியோர் அடங்கிய குழுவினர், புதுவை வேதபாரதியின் ஆலோசகரும், புதுச்சேரி வணிகர் கூட்டமைப்பின் செயலாளரும், அங்கத்தினர்களின் அன்புக்குரியவருமான திரு. பாலு அண்ணா அவர்களின் ஆலோசனையின் பேரில் புதுச்சேரி முதலமைச்சரை சந்தித்து கடந்த 02.04.2020 அன்று விளக்கமான மனு ஒன்றை அரசிடம் சமர்ப்பித்தனர். மனுவை பெற்றுக்கொண்ட முதல்வர் உடனடியாக ஆவன செய்ய உறுதியளித்தார்.

என்றாலும், அரசின் உதவி அவசரத்திற்கு உதவாது

என்பதை அறிந்த மேற்கண்ட நிர்வாகக் குழுவினர் உடனடியாக களத்தில் இறங்கினர்.

பிறரிடம் உதவி கோருவதைவிட நமக்கு நாமே என்ற உணர்வுகளுக்கு முக்கியத்துவம் அளித்து நமது உறுப்பினர்களிடமே உதவி கோருவதாக முடிவு செய்தனர்.

தலா ரூ.1500/- என்பது தற்போதைய இக்கட்டான நிலையில் குடும்பத்திற்கு உதவியாக இருக்கும் என்றும் அந்த தொகையை கொடையாளிகள் கொடுப்பதற்கும் ஏதுவாக இருக்கும் என்ற சமநிலை பார்வையில் இருதரப்பினரையும் வைத்து நிர்ணயித்தனர்.

கடந்த அரை நூற்றாண்டுக்கும் மேலாக புதுவை மற்றும் தமிழகத்தில் அந்தணர்கள் வஞ்சிக்கப்பட்டு வருகிறார்கள். ஆனாலும், தினம் தினம் உழைத்து குடும்பத்தை நடத்துகிறார்களே தவிர யாரிடமும் கையேந்தி நிற்கவில்லை. அவர்கள் ஏழைகளே தவிர பிச்சைக்காரர்களல்ல, கௌரவத்திற்கு எந்த குந்தகமும் இன்றி வாழ்க்கையை நகர்த்தி வருகிறார்கள் நமது சொந்தங்கள்.

இதை மிகக் கவனமாக கருத்தில் கொண்ட புதுவை வேதபாரதி நிர்வாகம் ஒரு முடிவுக்கு வந்தது. அதன்படி யாருக்கும் யார் உதவி செய்கிறார்கள் என்று தெரியாதவண்ணம் கொடையாளிகள் மூலம், பயனாளிகளுக்கு அவர்களின் வங்கிக் கணக்கில் தொகையை செலுத்த திட்டமிட்டது. இதன் மூலம் மறுபுறம், யாருக்கு உதவி செய்கிறோம் என்ற விபரம் தெரியாத வகையில் அதன் முழு பலனையும் கொடையாளிகள் பெற முடியும் எனவும் நினைத்தது.

இந்த சிந்தனையை தெளிவாக்கிய புதுவை வேதபாரதி நிர்வாகக் குழு, எக்காரணம் கொண்டும் பணத்தை தங்கள் கையில் வாங்குவதில்லை என்பதில் உறுதியாக இருந்தது குறிப்பிடத்தக்கது.

தங்கள் எண்ணத்திற்கு செயல் வடிவம் கொடுக்க இந்த செய்தியை 8.4.2020 அன்று மாலை புதுவை வேதபாரதியின் “வாட்ஸ் அப்” குழுவில் பகிரப்பட்டது.

**“எண்ணம் தூய்மையாக இருந்து செயல் தெளிவாக இருந்தால் நீ முடிக்க நினைக்கும் கார்யம் உன்னைத் தேடிவரும்.”**

*என்று மஹா பெரியவா சொன்னது நினைவில் வந்தது. பெரியவாளின் வாக்குப்படி செய்தி பகிரப்பட்ட 24 மணி நேரத்திற்குள் கிட்டத்தட்ட “மூன்று லட்சம்” ரூபாய்க்கான கொடையாளிகள் தொடர்பு கொண்டனர்.*

*அவர்களின் துணை கொண்டு 9.4.2020 மற்றும் 10.04.2020 ஆகிய இரண்டு நாட்களில் 200க்கும் மேற்பட்ட பயனாளிகளுக்கு அவர்களது வங்கிக் கணக்கில் தலா ரூ.1500/- செலுத்தப்பட்டது.*

*குருக்கள் சங்கம், பட்டாச்சார்யர்கள், சமையற் கலைஞர்கள், புரோகிதர்கள் சங்கம், சிரார்த்த போஜனம் செய்பவர்கள் என பயனாளிகளின் பட்டியல் மிகப் பெரிய அளவில் வந்திருந்தது.*

*கொடையாளிகளின் உதவித்தொகை தவறாக போய்விடக்கூடாது என்பதில் கவனம் செலுத்திய நிர்வாகக் குழு ஒவ்வொருவருக்கும் தனித்தனியாக தொலைபேசியில் தொடர்பு கொண்டு விபரங்களை சேகரித்தனர்.*

*தாய், தந்தையரை பராமரிப்பவர், சிறுகுழந்தைகள் வைத்திருப்போர், வாடகை வீட்டில் வசிப்போர், ஒருவேலையை மட்டுமே நம்பி இருப்போர் போன்றவர்களுக்கு முக்கியத்துவம் அளிக்கப்பட்டது.*

*பெரிய பட்டியல் வந்திருந்தாலும் அனைவருக்கும் உதவி செய்ய முடியவில்லை, என்றாலும் கொடையாளிகள் தொடர்ந்து தொடர்பு கொண்டு வருகின்றனர் என்பது மகிழ்ச்சியளிக்கிறது.*

*புதுவை வேதபாரதி நிர்வாகக்குழு வள்ளல் கொடையாளிகளுக்கு நன்றி தெரிவித்துக் கொள்வதோடு, மஹாபெரியவாளின் அனுக்ரஹம் வேண்டி ப்ரார்த்திக்கிறது.*

**ஆதிரையன்**

# ஏப்ரலில் புதுவை வேதபாரதி

'எதிர்பாராத விதமாக "கொரானா" விஷக்கிருமி தாக்குதல் காரணமாக ஒட்டுமொத்த உலகமே முடங்கியது. அதில் ஒரு பகுதியாக பாரத தேசத்தை காப்பாற்றும் பொருட்டு கடந்த 25.03.2020 முதல் தொடர்ந்து 21 நாட்களுக்கு ஊரடங்கு பிறப்பித்தது மைய அரசு.

இதனால் அனைவரும் வீட்டிற்குள்ளே முடங்கினர். ஒவ்வொருவரும் ஒவ்வொரு விதமாக பொழுதை போக்குகின்றனர். இதில் வேதபாரதி தனது உறுப்பினர்களை, விரைவாக தேசம் நலம்பெற பிரார்த்திக்க கேட்டுக் கொண்டது. "லோகா ஸமஸ்தா ஸுகினோ பவந்து" என்ற வாக்கியத்தின் வழியில் வாழும் வேதபாரதி உறுப்பினர்கள், தலைமையகத்தின் வேண்டுகோளை ஏற்று புதுவை வேதபாரதி நிர்வாகத்தினரும் கேட்டுக் கொண்டதற்கு இணங்க அவரவர் இல்லங்களில் குறிப்பிட்ட அந்த நேரத்தில் அரசாங்கத்தின் வழிகாட்டுதலின் படி சமுதாய இடைவெளியில் கூட்டாக லோகம் நலம்பெற சங்கல்பம் செய்து விஷ்ணு சஹஸ்ரநாமம், லலிதா சஹஸ்ரநாமம் மற்றும் லலிதா திரிசதி பாராயணம் செய்தனர்.

ஒட்டுமொத்த தமிழகமும், புதுச்சேரியும் இந்த கூட்டுப் பிரார்த்தனை பாராயணத்தில் கலந்து கொண்டாலும் அதில் புதுச்சேரியின் பங்கு குறிப்பிடத் தக்கதாகும்.

மார்ச் 28, 2020 அன்று 695, ஏப்ரல் 4, 2020 அன்று 722, ஏப்ரல் 11, 2020 அன்று 318 மற்றும் 18.04.2020 ஏகாதசியன்று அகண்ட பாராயணத்தில் 370 என மொத்தம் 2305 ஆவர்த்திகளை புதுச்சேரி வேதபாரதி தலைமையகத்திற்கு சமர்ப்பித்தது.

மேலும் விகாரி வருடம், பங்குனி மாதம் 25ந் தேதி, 7.4.2020, செவ்வாய் கிழமை பௌர்ணமியன்று "திருமீயச்சூர்" லலிதாம்பிகை தரிசனத்திற்கு செல்வதற்காக புதுவை வேதபாரதி திட்டமிட்டிருந்தது.

*தற்போதைய சாதகமற்ற சூழ்நிலையால் அந்தப் பயண ஏற்பாடு ரத்து செய்யப்பட்டது. மாறாக அவரவர் இல்லங்களில் கூட்டாக லலிதா சஹஸ்ரநாமம் மற்றும் லலிதா திரிசதி பாராயணம் செய்ய அங்கத்தினர்கள் கேட்டுக் கொள்ளப்பட்டனர்.*

*தேசம் விரைவில் நலம்பெற, அன்றைய தினம் புதுவை வேதபாரதி அங்கத்தினர்கள், லலிதா சஹஸ்ரநாமம் 978 ஆவர்த்திகளும், லலிதா திரிசதி 251 ஆவர்த்திகளும் பாராயணம் செய்து அம்பாளின் அனுக்ரஹத்தை வேண்டினர்.*

*தீபமும், அதன் சுடரும் விஞ்ஞான பூர்வமாக பல அதிசயங்களை தன்னகத்தே கொண்டுள்ளது என்பதை உணர்ந்த நமது முன்னோர்கள், தீபம் ஏற்றுவதற்கும், அதை வழிபடுவதற்கும் முக்கிய இடம் தந்துள்ளனர். இதை சனாதன தர்மத்தில் முழுமையாக ஏற்றுக்கொண்டு இன்றுவரை கடைபிடித்து வருகிறோம்.*

*இதை முழுமையாக அறிந்த நமது பிரதமர் கடந்த 5.4.2020 ஞாயிற்றுக்கிழமையன்று இரவு 9.00 மணிக்கு 9 மணித் துளிகள் தீபங்களை அவரவர் இல்லங்களில் ஏற்றி மின் விளக்குகளை தவிர்த்து, ''கொரோனா'' போராட்ட களத்தில் பணிபுரிபவர்களை ஊக்குவிக்குமாறு கேட்டுக் கொண்டார்.*

*பிரதமரின் இந்த வேண்டுகோளை புதுவை வேதபாரதி நிர்வாகத்தினர், அதன் அங்கத்தினர்களிடம் வைக்க, அனைவரும் தேசத்தை பாதுகாப்போம் என்றும் பொறுப்புள்ள குடிமகன்கள் என்றும் பறைசாற்றும் விதமாக அவரவர் இல்லங்களில் தீபம் ஏற்றி பிரதமரின் வேண்டுகோளை நிறைவேற்றி தேசத்தின் பக்கம் நின்றனர்.*

*மொத்தத்தில் இந்த 2020 ஏப்ரலை நமது புதுவை அங்கத்தினர்கள் தேசத்திற்காக, லோகத்திற்காக முழுமையாக அர்ப்பணித்தனர்.*

# ராஜலட்சுமி கல்யாண மண்டபம்

*வேளச்சேரி மெயின் ரோடு, தண்டீஸ்வரம்,*
*சென்னை - 600 042.*




- *800 பேர் அமர்ந்து ஆசிர்வதிக்க ஏ/சி ஹால்.*
- *சகல வசதிகளுடன் கூடிய மணமகன், மணமகள் அறைகள்.*
- *உறவினர்கள் தங்க - குளிரூட்டடப்பட்ட அறைகள்.*
- *விசாலமான கார் பார்க்கிங்.*
- *வெகு அருகில் சிவன், பெருமாள் ஆலயங்கள்.*
- *நகருக்கு மத்தியில் அமைந்துள்ள பிரசித்தி பெற்ற மண்டபம்.*
- *24 மணி நேரமும தண்ணீர் & மாடுலர் கிச்சன் வசதி.*

தொடர்புக்கு

**48625585 / 9840545585**




## ஆக்ஞா

### மனநல ஆலோசனை மையம்

**நாங்கள் வழங்கும் சேவைகள் :**

- *பள்ளி மாணவர்களுக்கு, கல்வியாளர்களுக்கு குடும்ப உறவுகளுக்கு, நிறுவனங்களுக்கு, ஆலோசனை வழங்குதல்*
- *பள்ளி கல்லூரி மாணவர்களுக்கு வழிகாட்டுதல்*
- *பயமின்றி தேர்வு எழுத பயிற்சி வழங்குதல்*
- *சரியான துறையை தேர்ந்தெடுத்தல் போன்றவற்றிற்கு வழி காட்டுதல்*
- *குடும்ப உறவுகள் மேம்பட தனித்தனியாக மனநல ஆலோசனை வழங்கப்படும். மென்பொருள் நிறுவனங்கள் கார்ப்பரேட் நிறுவனங்களில் பணி புரிபவர்களுக்கு மன உளைச்சல் நீங்க, பணி மேம்பட, மன அழுத்தம் குறைய பயிற்சி அளிக்கப்படும். ஆலோசனை வழங்கப்படும்.*

**நேரம் : மாலை 6.30 மணி முதல் 9.30 மணி வரை**
**முன்பதிவு அவசியம் : 94448 08799**

## வெட்டி, ஓட்டும் தலைமுறை

இளைய தலைமுறையினர் இன்று அதிவேக ஓட்டப்பந்தயத்தில் ஈடுபட்டுக் கொண்டிருக்கிறார்கள். சிலர் கல்லூரிக்கு, சிலர் பள்ளிக்கூடத்திற்கு சிலர் பணியிடங்களுக்கு என்று, தேர்வுகளுக்கு முட்டி மோதுகிறார்கள். வாழ்க்கை மிகவும் இயந்திரத்தனமாகிவிட்டது. பள்ளிக்குச் செல்லும் குழந்தைகளுக்கு நல்லதொரு கல்லூரியில் இடம் பிடிக்க கவலை கொள்கிறார்கள். கல்லூரியில் தேர்வுகள் எழுதும் மாணவர்கள், கல்லூரிவளாகப் பணித்தேர்வில் சிறந்த நிறுவனத்தில் வேலை கிடைக்க வேண்டுமே என்று இறைவனை வேண்டுகிறார்கள். நிறுவனங்களில் பணிபுரிபவர்களோ, உலகிலேயே சிறந்த பெரிய நிறுவனத்தில் இடம் பிடித்துவிட விரும்புகிறார்கள். இப்படியாகத்தானே அனைத்துத் துறைகளிலும் போட்டா போட்டிகள்! களைத்து விழும்வரை மனிதன் இவ்வாறு எதற்கோ, எதன் பின்னாலோ ஓடிக்கொண்டே இருக்கிறான். அதிர்ஷ்டமிருந்தால் பணி ஓய்வுக்குப் பிறகு அவனைச் சுற்றி மருத்துவர்களும், வக்கீல்களும் போலீஸ்காரர்களும் இல்லாமல் இருக்கலாம்.

ஒரு மனிதனுக்கு ‘சுயத்தேடல்’ மிகவும் அவசியமாகிறது. இந்த பூமிக்கு தான் வந்திருக்கும் நோக்கம் என்னவாக இருக்கும் என்ற தேடல் மிக அவசியம். கூட்டுக் குடும்பங்கள் இன்று இல்லாமலே போய்விட்டன, சகிப்புத்தன்மை குறைந்து கொண்டே வருகிறது, மனிதர்கள் பரிவையும் பாசத்தையும், உற்றார் உறவினர்களைத் தவிர்த்து, சமூக ஊடகங்களில் தேடுகின்றனர். இந்தப் பொய்யான சமூக ஊடகங்களை விட்டு வெளிவருவதற்கு அவர்கள் தயாராக இல்லை. சின்னச்சின்ன பிரச்சினைகள் மிகப்பெரிய பிரச்சினைகளாக ஊதிப் பெரிதாக்கப்படுகின்றன. விவாகரத்துக்கள், தற்கொலைகள், வீட்டைவிட்டு வெளியேறுதல் ஆகியவைகள் மிகவும் அதிகமாகி, அதுவே பொய்யான சமூக ஊடக வளர்ச்சிக்கும் காரணமாகிவிட்டன. அனைத்தையும் ஆறு அங்குல கைபேசியில் அடைந்துவிடத் துடிக்கிறார்கள்.

இத்தகைய சிக்கலான சூழ்நிலையில் வாழுபவர்களின் மனமும், மூளையும் மிகுந்த அழுத்தத்தில் தவிக்கின்றன, துன்பப்படுகின்றன. இத்தகைய தாங்கமுடியாத தவிர்க்க முடியாத சூழ்நிலைகள்தான் தேவையற்ற நடவடிக்கைகளுக்கு அவர்களைத் தள்ளிவிடுகிறது. கடவுள் மிகவும் அழகான இனிமையான வாழ்க்கையை நமக்கு வரமாக அருளியிருக்கிறான். பூமிப்பந்தின் மிகப்பெரிய திரையின் அழகினை அனுவிப்போம், எல்க்ட்ரானிக் உபகரணங்களின் சின்னத்திரைக்குள் நம்மை குறுக்கிக் கொள்ள வேண்டாம். ஒருநாள் இப்படி முயற்சி செய்து பார்ப்போமே....

கைபேசியை 24 மணி நேரத்திற்குத் தள்ளிவைப்போம். அப்போது புரியும் உங்கள் கையில் எவ்வளவு மணி நேரம் இருக்கிறது என்று ஆக்கபூர்வமாக சிந்திக்கத் தொடங்குவீர்கள். அற்புதமான அனுபவங்கள் உங்களுக்கு கிடைக்கும். பாரதம் என்ற அற்புதமான தேசம் உலகையே வியக்கவைக்கும் சிறந்த தேசமாக ஆகிக்கொணடிருக்கிறது. அதன் குடிமக்களான நாம் அதன் உயர்வுக்கான பொறுப்பான பங்களிப்பை செய்வோம், நமது ஆக்க பூர்வமான சக்திகளை வேலைகளில் வீணடிக்க வேண்டாம். இளைஞர்களே! இந்த தேசம் உங்களுக்காக காத்திருக்கிறது, எழுச்சியுடன் விழித்தெழுந்து உன்னதமான செயல்களில் உங்களை ஈடுபடுத்திக் கொள்ளுங்கள்.

**தமிழாக்கம் : டாக்டர் ஷ்யாமா**

**அமிதாப் தோஷி**
சென்னை.

---

## "வேதாந்த பிரபோதம்" புத்தகம்

நம் பூஜ்யஸ்ரீ பரமானந்த பாரதி ஸ்வாமிகள் அருளியது. தற்போது கிரி டிரேடிங் நிறுவனத்தினர் அழகான வடிவத்தில் வெளியிட்டுள்ளார்கள். வேதபாரதி மூலம் பெறுவோர்க்கு சிறப்பு சலுகை உண்டு.

தொடர்புக்கு : **9444445156 / 97909 20672**

# தர்மம் - வேளச்சேரி வேதபாரதி

*வேதபாரதி குடும்பத்தினர்கள் கடந்த 1 மாத காலமாக ஓர் மிகச்சிறந்த பணியினை செய்து கொண்டு உள்ளார்கள். வேதபாரதியின் சிறிய வேண்டுகோளை ஏற்று வசதி குறைவாக உள்ளவர்களுக்கு உணவு பொருட்கள் உதவி மற்றும் பொருள் உதவி செய்து உள்ளார்கள். அதைவிட பெரிய ஆச்சர்யம் என்னவெனில் நாங்கள் கொடுக்கிறோம் என்பதை யாரிடமும் சொல்ல வேண்டாம் என்று சொன்னார்கள்.*

*தர்மம் என்பது நம் பரம்பரை காக்கும். தற்போது பணவசதி இல்லாதவர்கள் யாரும் திட்டமிட்டு ஏழ்மையை விரும்பி ஏற்றுக் கொள்ளவில்லை. காலம், சூழல், விதி ஏதோ ஒன்று அவரை ஏழ்மையில் கொண்டு வைத்துள்ளது. வசதி உள்ளவர்கள் உழைப்பு, காலம், சூழ்நிலை, விதி அவர்களுக்கு வசதி இறைவன் அளித்துள்ளான். தற்போது வசதி உள்ளவர்கள், வசதி இல்லாதவர்களுக்கு உதவி செய்தது மட்டுமல்ல, விளம்பரம் வேண்டாம் என்று தெரிவித்தது மிகவும் மனநிறைவு கொடுத்தது.*

*ஊரப்பாக்கம் பகுதியில் நம் வேதபாரதி அன்பர்கள் வசதி குறைவான ஓர் குடும்பததிற்கு இந்த மாதத்திற்கு தேவையான சமையல் பொருட்கள் கொடுக்கச் சென்றபோது அந்த நண்பர் சொன்ன விஷயம் நம்மை நெகிழ வைத்தது. என்ன தெரியுமா? அந்த நண்பர் சார், இந்த மாதம் எங்கள் தேவைகளை எப்படியோ பூர்த்தி செய்து விட்டோம். என்னை விட இன்னும் வசதி குறைவாக உள்ளவர்களுக்கு உதவி செய்யுங்கள் என்று கூறினார். உண்மையில் இவர்கள் உள்ளத்தால் மிகவும் வசதியானவர்.*

*உலகம் கற்றுக்கொண்ட விஷயம் : தற்போது மற்றவர்களுக்கு வழங்கும் வாய்ப்பை இறைவன் கொடுத்துள்ளான். பெறுபவர்கள், கொடுப்பவர்களை விட கீழானவர்கள் அல்ல. ஏதோ ஓர் எதிர்பார்ப்புடன் செய்யும் எந்த செயலும் பிரயோஜனம் இல்லை. எல்லாவற்றையும் ஆட்டிப்படைக்கும் இறைவனுக்கு எல்லாம் தெரியும் என்ற எண்ணம் நமக்கு உள்ளவரை வேதபாரதி குழுவினர்க்கு எல்லா சூழலும் நன்மையையே கொடுக்கும்.*

*என்றும் அன்புடன் ஆசிரியர்*

# அனுபவமே வாழ்க்கை

*சுதாவிற்கு சின்ன குழந்தைகளைப் போல பாவாடையை சுழன்றி பாடி ஆடி குடைபோல செய்து உட்கார்ந்து கொள்ளுவார்களே அது போல தன்னையே சுழன்றுகொள்ள வேண்டும் போல இருந்தது...*

*ஜல் ஜல் என்று சலங்கை கட்டி ஆடவேண்டும் போல... பின்னே இருக்காதா! எவ்வளவு கனவு? தாய்லாந்து போக வேண்டும் என்ஜ்ஜாய் பண்ண வேண்டும் என்று நினைப்பு. ஜாலியாக பெட்டியில் துணிமணிகளை அடுக்க ஆரம்பித்தாள். சின்ன குட்ட சட்டை, மேலே போட்டுக் கொள்ள பனியன் இது சல்வார் கமீஸ் மேலே துப்பட்டா, அதை விட இந்த அறுவையிலிருந்து பத்து நாட்கள் விடுதலை, விடுதலை... மனம் குஷி ஆட்டம் போட ஆரம்பித்தது.*

*சுதாவும், பாஸ்கரும் தாய்லாந்து 'சுவர்ண பூமி'' ஏர்போர்ட் வந்தடைய இதோ இன்று வழி காட்டியின் துணையோடு புத்தர் கோவில் விசிட்., புத்தர் கோவில் அருகில் சென்றவுடன் ஒரு கரம் சுதாவை தடுத்து நிறுத்தியது யார் தடுத்துநிறுத்துவது, கண்களை உயர்த்தி சுதா பார்க்க ஓர் நீண்ட பச்சை நிற கவுன் போன்ற உடையுடன் ஒருவர் நின்றிருக்க என்ன இது.*

*செய்கையால் விளக்கப்பட்டது. புத்தர் கோவிலுக்கு உள்ளே செல்லும் போது இப்படி குறைவான உடையில் செல்லக் கூடாது. உடல் முழுவதும் மூடப்பட்டிருக்க வேண்டும். இது இந்நாட்டு கட்டளை.*

*சட்டென்று திரும்பி பார்த்தாள் சுதா, மேலே துப்பட்டா இல்லாமல் ஜீன்ஸ் ஷர்ட் போட்டு வந்திருந்த பெண், கவுன் அணிந்து வந்திருந்த அமெரிக்க பெண்மணி எல்லோருக்கும் பச்சை கவுன் சுதாவும் அங்கு கொடுக்கப்பட்ட பச்சை கவுன் அணிந்து கொண்டு புத்தர் கோவிலை சுற்றிப் பார்க்க ஆரம்பித்தாள்.*

*10 நாட்கள் முடிந்தது. மீண்டும் தாய்மண்ணில் அன்று காலை தான் வந்து இருந்ததால் பால் வாங்கி வருவதற்கு காலை 5 மணிக்கு பால் பூத்திற்கு புறப்பட்டு போனாள். காலை வேளை ஆனதால் ஒரு ஷால் கொண்டு தலையில் போட்டுக் கொண்டு நடந்தாள். ஓர் இடத்தை கடக்கும் போது என்ன மச்சி இன்னிக்குக் காணோம். யாரோ ஒருவன் மற்றொருவனிடம் கேட்க - தெரியலடா மச்சி பத்து நாள் பிகரை பார்க்காம கண்ணே பூத்து போச்சுடா என்று கூறினான்.*

அதற்குள் மற்றொருவன் ஏன்டா அந்த பச்சை கேட் வீட்டு தரிசனம் இன்னிக்கும் இல்லையா? சரி வாடா வாடா வேறு தெருவிலே யாராவது கோலம் போடும் போது பார்த்துக்கலாம் என்று பேசிக்கொண்டார்கள். இந்த கேட்க சகிக்காத வார்த்தைகளையும் தரக்குறைவான விமர்சனங்களையும் பேசிக் கொண்டே அவர்கள் கடந்து போனார்கள். சட்டென்று இதுவரை மறைவிடத்தில் நின்ற சுதா வெளியே வந்து அவர்கள் சுட்டிக் காட்டிய பச்சை வீட்டை பார்த்தாள். அதிர்ந்து போனாள். ஏன் தெரியுமா? அது சுதாவின் வீடு. எப்படி பால் வாங்கி எப்படி வந்தாள் என்று எதுவுமே புரியாத இயந்திரம் போல தன் வீட்டிற்கு வந்து சேர்ந்தாள்.


தினமும் காலை தன் வீட்டு வாசலில் நைட்டியுடன் குனிந்து கோலம் போடும் பொழுது திருட்டுத்தனமாக தனது அந்தரங்கங்களை பார்த்த பொறுக்கிகளை நினைத்து மனம் நொந்து கொண்டாள். தற்பொழுது தனது மாமியார் சொன்ன சில கருத்துக்கள் மனதில் ஓடியது. சுடிதார் மற்றும் டாப் மட்டும் போட்டுக் கொண்டு பரிமாறுவதால் அங்கும் இங்கும் பார்வையில் சில உறவினர்களது பார்வையை கவனித்து தனக்கு அன்பாக கூறிய மாமியாரின் வார்த்தையை... சட்டென்று மாமியாரின் குரல் காதில் ஒலித்தது. மென்மையான அலட்டல் இல்லாத அதிகாரம் செய்யாத அன்பான உண்மையான குரல்.

கோவிலுக்கு போறச்சே மட்டும் புடவை கட்டிக்கோ சுதா, நம்ம பழக்கம் இல்லையா, நைட்டி டிரஸ் உன்னோட படுக்கை அறையோட நிறுத்திக்கோ சுதா.

பரிமாறும் போதும் வெளியில் செல்லும் போதும் துப்பட்டா போட்டுக் கோ. சரியா இருக்கும், அப்பொதெல்லாம் சுதாவிற்கு அந்த வார்த்தை எரிச்சலாக இருக்கும். கிழத்துக்கு வேறு வேலை இல்லை. நாம் எப்படி டிரஸ் பண்ணிகிட்டா என்ன? ரொம்ப தொண தொணப்பு என்று அப்பொழுது நினைத்ததை தற்போது நினைத்து பார்த்தாள். உலகத்தின் உண்மையான எண்ணங்கள் தற்போது புரிந்தது.

இதோ இன்றுடன் ஒரு புதிய சுதா தன்னை அறியாமல் செய்த சிறு கவனக் குறைவையும் அதன் பின்விளைவுகளையும் எண்ணி மிகவும் வருந்தினாள். புதிய சுதா நல்ல குடும்ப பெண்மணி, அடுத்த தலைமுறைக்கு வழிகாட்டியாக உருவாகினாள்.

திருமதி.லட்சுமி நடராஜன்


MULTI-PURPOSE SURFACE CLEANSER
NSF
Dilution Ratio – 1:100
Highly Concentrated
Safer to skin
VESSEL CLEANSER
Cost/Utensil = 0.45 Paise/vessel (<1Paise/Utensil)
CARBON CLEANSER
DISINFECTANT CLEANSER
Approved by Intertek
WOPPER
Fluid Chemistry
Paint & Printing Ink
Leather
Rubber
Automobile
Construction & Hardware
Textile
Agriculture
Domestic
Food & Hospitality
Detergents
Celebrate productivity & cleanliness
Textile | Leather | Rubber | Construction & Hardware | Agriculture
Paint & Printing Inks | Domestic | Food & Hospitality | Detergents
INDIA | UAE | SINGAPORE | QATAR | SRI LANKA
DE-SCALER
WATER TANK CLEANSER
100% organic & safe for lungs
Free from Chlorine
OVEN & GRILL CLEANSER
Less maintenance cost
Maintains aesthetics & performance of machines
URINAL CLEANSER
Dissolves uric acid salt buildup.
Eliminates rust deposits.
Preserve environmental hygiene.
Reduces maintenance cost.
Competitive cost.

G. SIVAGAMASUNDARI
99940 89133



N. GURUMURTHY
99940 89140

**SRI SASTHA CATERING**



*We are Supplying Meals,*
*Tiffin & Marriage Sear*
*Variation in Order*



**14-C, Sitravasu Street, Macmillan Nagar, Nanganallur, Chennai.**

# திருக்கோயில் உழவாரப்பணி மன்றம்

*14, பாலசுப்ரமணியர் கோயில் தெரு,*
*லட்சுமி நகர், வேளச்சேரி, சென்னை - 600 042.*

*செல்:* **9445121080, 7200935145**

திருகோவில் உழவாரப்பணி மன்றம் சென்னை வேளச்சேரியில் சிவத்திரு ஆடலரசு ஐயா அவர்கள் தலைமையில் எல்லாம் வல்ல சிவபெருமான் அருளால் சிவனடியார்கள் பல ஆண்டுகளாக உழவாரப்பணி செய்து வருகிறார்கள். கடந்த 9 ஆண்டுகளாக 46 ஆலயங்களில் இனம், மதம், மொழி வேறுபாடின்றி அனைவருக்கும் பசிப்பிணி போக்கும் அன்னதானப் பணியை தொடர்ந்து செய்து வருகிறார்கள். குறிப்பாக பாண்டிச்சேரி அரியாங்குப்பம் சமையல் கூடத்தில் சமையல் செய்து சுற்றி உள்ள 14 கிராமங்களில் உள்ள திருக்கோவில்களில் மதியம் அன்னதானம் வழங்குகிறார்கள். இச்சிறந்த பணிக்காக தங்களை அர்ப்பணித்து செயலாற்றும் அடியார் பெருமக்கள், பொருள் உதவி, பண உதவி செய்யும் நல் உள்ளங்கள் ஆரோக்யமாக வாழ்ந்து இப்பணி தொடர்ந்து நடைபெற வேதபாரதி வாழ்த்துகிறது. எல்லாம் வல்ல இறைவன் திருவருளால் நலமுடன் வாழ ப்ரார்த்தனை செய்கிறோம்.

உழவாரப்பணி அன்னதான குழு
போன் : 9445121080 / 7200935145

அன்புடன் : செயலாளர்
வேதபாரதி

# ANATHA PRETHA KAINKARYA TRUST
# அநாத ப்ரேத கைங்கர்ய ட்ரஸ்ட்

G-2, Vijay Builders, Plot No.24, Kandaswamy Nagar, 9th Cross Street,
Palavakkam, Chennai - 600 041, India.
Mobile : 98407 44400, 98402 43592, 98400 45776
Email : sreedhar.apkt@gmail.com Website : www.dharmaa.org



## ஸ்ரீ காஞ்சி
## மஹா ஸ்வாமிகளின் அருளுரை
## தெய்வத்தின் குரல் 3ம் பாகம்
## அநாதைப் பிரேத ஸம்ஸ்காரம்
## இது தான் அச்வமேதம்

*இதுவரை அச்வமேதத்துக்கு ஸமமான பலனைத் தருகிற ஒரு பணியைச் சொல்லவில்லை. மற்ற எல்லாவற்றையும் விட உயர்ந்ததான அந்தப் பணி என்னவென்றால், அதுதான் அநாதைப் ப்ரேத ஸம்ஸ்காரம்*

### அநாத ப்ரேத ஸம்ஸ்காராத்ம
### அச்வமேத பலம் லபேத்

*என்பது சாஸ்த்ர வசனம்*

*பர - உபகாரமாக, செத்துப் போன இன்னொரு ஜீவனுக்கு இதனால் உதவி பண்ணும் போதே, நமக்குப் பாபம் வராமல், கடமையைச் செய்து, நமக்கு உபகாரம் பண்ணிக் கொள்கிறோம்.*

### இந்த அறக்கட்டளையின் நோக்கம்

1. *அநாத ப்ரேத ஸம்ஸ்காரம்*
2. *கர்த்தா ஏழையாக இருந்தால் அவர் செய்கின்ற தகன காரியங்களுக்கு உதவி செய்தல்.*
3. *நீத்தார் கடன், அந்த்யேஷ்டி இவைகளை குறித்து தர்மப்ரசாரம் செய்தல், பொது மக்களுக்கு விழிப்புணர்ச்சி ஏற்படுத்துதல்.*
4. *மருத்துவமனையில் பல மாதங்களாக கிடக்கும் ப்ரேதங்களை அரசு அல்லது நீதிமன்ற உத்தரவு பெற்று உரிய ஸம்ஸ்காரம் செய்தல்*

Contributions can be sent to :
A/c Name : Anatha Pretha Kainkarya Trust
Bank Name : Canara Bank, T.Nagar Branch
A/c No : 0917101048526 / IFSC Code : CNRB0000917
K. JAYARAMAN, Trustee / Treasurer
No.3, Mullai Street, Balaji Nagar, Adambakkam, Chennai - 600 088.
Cell : 9840045776 / Email : jayaraman2212@gmail.com

# இமைப் பொழுதில் கண் முன் உங்கள் கிரெடிட் கார்டு

சிட்டி யூனியன் பேங்க் வழங்கும் உடனடி கிரெடிட் கார்டு




சிட்டி யூனியன் பேங்க் வழங்கும் உடனடி ஆன்லைன் டைட்டானியம் கிரெடிட் கார்டு. வங்கியில் வைப்புக் கணக்கு (Fixed Deposit) வைத்துள்ள அனைத்து வாடிக்கையாளர்களுக்கும் இந்த கிரெடிட் கார்டு முற்றிலும் இலவசமாக வழங்கப்படுகிறது.

சிட்டி யூனியன் பேங்கின் வாடிக்கையாளர்கள் இந்த கிரெடிட் கார்டினை பெற CUB நெட் பேங்கிங் மூலம் எளிமையான முறையில் உடனடியாக விண்ணப்பிக்கலாம். நீங்கள் விண்ணப்பித்தவுடன் உங்கள் கம்யூட்டர் திரையில் Virtual Credit Card தோன்றும். இதனை உடனடியாக உபயோகப்படுத்தி ஆன்லைனில் ஷாப்பிங் மற்றும் டிக்கட் புக்கிங், பணம் செலுத்துதல் ஆகிய தேவைகளைப் பூர்த்தி செய்யலாம்.

உங்கள் பிளாஸ்டிக் கிரெடிட் கார்டு விரைவிலேயே உங்கள் இல்லத்தையோ / அலுவலகத்தையோ வந்தடையும்.

CUB TRUST AND EXCELLENCE SINCE 1904

## சிட்டி யூனியன் பேங்க்

www.cityunionbank.com ராசியான பேங்க், ஈஸியான பேங்க்

For assistance, Call our 24x7 Customer Care at 044-7122 5000, Mobile : 7299075077 / 7299075078

Keep your bank account details, passwords, ATM PIN, OTP etc. safe. Do not share with anyone.

REGD No. : TN/CC(S)DN/571/18-20 RNI No : TNTAM/2016/73726
TN/PM G (CCR) / WPP 605/19-20 / Valid from 28.02.2019 to 31.12.2020
Published 1-7th (1st Week) Every Month




தரமான நகைகளுக்கு
சரியான முகவரி

சூர்யா ஜீவல்லர்ஸ்® A/c

287,288, புளியமரச்சந்து, ஈஸ்வரன் கோவில் வீதி, திருப்பூர் - 4. போன்: 0421 2241829

78, ஈஸ்வரன் கோயில் வீதி, குலாலர் பிள்ளையார் கோயில் எதிரில், திருப்பூர். போன் : 0421 2241827

சூர்யா எலக்ட்ரிக்கல்ஸ்

7(2), புளியமரத்தோட்டம், மங்கலம் ரோடு, திருப்பூர் 4.
போன்: 0421 2241826

To

Printed Matter

If not delivered please return to
**VEDABHARATHI**
No.31, Seshadripuram 1st Main Road, Baby Nagar, Velachery, Chennai-42.